"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பவ வருஷம் ★ 1995 ★ சித்திரை ★ வைகாசி ★ ஆனி

# சிவநெறி


# SIVANERI

## முத்திங்கள் சஞ்சிகை

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு

மலர் ★ 4 ★ இதழ் ★ 5

## தவத்திரு குன்றக்குடி அடிகளாரை நினைவுகூருமுகமாக வெளியிடப்படும் சிறப்புமலர்



மனித சமுதாயத்தின் மத்தியில் சமத்துவம் சமதர்மம் சகோதரத்துவம் தோன்றி சமுதாயமறுமலர்ச்சிக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்த புரட்சித் துறவி தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமது இலங்கை விஜயத்தின் போது திருக்கோணமலை கங்குவேலி அகத்தியர் ஸ்தாபன சிவலிங்கத்தை வழிபடுகின்றார்.

உள்ளே

திருக்கோணமலையில் அடிகளார்

கடவுளைப் போற்று மனிதனை நினை

அன்னையர் அருள்நெறி

உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்கள் வரை

சிந்து அறிவியல் சுவட்டில்

கோமாதாவைக் கௌரவிப்போம்

குன்றார் பதிகம்

செய்திச் சரம்

மாணவர் உலகு

விலை ரூபா 12/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தி.மா.இ.இ. பேரவையின் நான்காவது திருவாசக விழாவில் சென்னை இராஜபுரம் புனித இராஜப்பர் உயர் நிலைப்பள்ளியின் உதவி அதிபர் கவிராசயோகி கபிலவாணன் (எம்.ஏ) எம்பில் உரையாற்றுகின்றார்.



பேரவையின் நான்காவது திருவாசக விழாவில் தவத்திருகுன்றக்குடி அடிகளாரால் கவிஞர்கோ பட்டம் சூட்டப்பெற்ற புலவர் சோம சிவப்பிரகாசம் [(எம்.ஏ.), அண்ணாமலைப்பல்கலைக் கழகம்] சிறப்புரை ஆற்றுகின்றார்.



சிவநெறி வெளியீட்டை திருக்கேதீஸ்வரத் திருத்தல திருப்பணிச்சபை முக்கியஸ்தர் புலவர் அ. திருநாவுக்கரசு அவர்கள் வெளியிட்டு வைக்கின்றமை.



தஞ்சை மாவட்டம்
பருத்தியூரிலுள்ள திருமாலின்
செப்புத் திருமேனி.
சோழர் காலம். கி.பி 10-ஆம் நூற்றாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே



உ
சிவமயம்



## திருக்கேதீச்சர பதிகம்

திருச்சிற்றம்பலம்.

நத்தார் படை ஞானன் பசு வேறிந்நனை கவிழ்வாய்
மத்தப்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

மனித சமுதாயத்தின் உயர்ச்சிதான் உலக மேம்பாடு. தாம் வாழுகின்ற நாட்டில் வாழும் மக்களின் முன்னேற்றந்தான் அந்த நாட்டின் முன்னேற்றம். சமயத்துவம் இல்லாத எந்த நாடும் அபிவிருத்தியில் முன்னேற்றம காண முடியாது. தாழ்ச்சி உயர்ச்சி அற்ற எல்லோரும் ஓர் இனம், எல்லோரும் ஓர் குலம் என்றும் உயரிய நிலை மக்கள் மத்தியில் நிலவ வேண்டும். ஆண்டான் அடிமை என்னும் நிலை அற்ற சமதர்மசமுதாயம் மலர வேண்டும் என்னும் இலட்சியத்துக்காக தமது வாழ்நாளை மக்கள் சேவைக்காகவே அர்ப்பணித்த புரட்சித்துறவி தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆவர்.

மனிதன் உயிர்ப்பு நிலையில் இருப்பதற்குத் தடையற்ற சுவாசநிலையே காரணம். மனித சமுதாயம் செம்மையுற வாழ முயற்சியும் இடையறாப் பணியும் வேண்டும் என்றார். சொல்லில் மட்டுமன்றி செயலிலும் செய்து காட்டினார். வாழ்ந்து காட்டினார். மக்கட்பணியே மகேசன் பணியென்று வாயால் மட்டும் கூறி தம்மை வளர்த்துக் கொண்ட வேடதாரிகளான சகலரும் வெட்கித் தலை குனியும் வண்ணம், மக்களோடு மக்களாக வாழ்ந்து அவர்களின் துயர் நீக்கிப் பணி செய்வதே உண்மைத்துறவு என்று உலகுக்கு எடுத்துணர்த்திய புரட்சித்துறவி அடிகளாராகும்.

மக்கள் மாண்புற வாழ வழிகாட்ட வந்த சமயங்களின் பெயரால் வேற்றுமைகள் சண்டைகள் கோயில் உரிமைகள், கோயில் உடைப்புகள், அரசியலில் வெற்றிபெற சமயத்தைக் கருவியாய்க் கொள்ளல். ஏன் இன்று ஆட்சி பீடத்தை ஆக்குவதோ, அழிப்பதுவோ சமயத்தலைவர்களின் கையில் நின்று நிலவுவதைக் கண்கூடாகக் காண்கின்றோம். சமயத்தின் பேரால் உள்நாட்டுச் சண்டைகள் அழிவுகள், சமயப் போட்டியின் அடிப்படையில் ஓர் உலகப் போர் ஏற்பட்டால் கூட ஆச்சரியப் படுவதற்கில்லை. இந்த வகையில் சமய நெறிகள் உருநிலைக்கப்பட்டு, சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளன.

மக்கள் வாழ்க்கைக்கு நல் வழிகாட்ட வந்த சமயங்கள் உலகை உய்விக்க வந்த சமயங்கள், அன்பு நெறியை மொழியவும் வந்த சமயங்கள். தாழ்ச்சி உயர்ச்சியற்ற சமதர்ம வாழ்வுக்கு வழிவகுத்துத்தர வேண்டிய சமயங்கள் மக்களை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்லல் தருமமாகுமா? என வேதனைக்கடலில் ஆழ்ந்தவர் அடிகளார்.

உலக சமயத்தலைவர்களே ஒன்றுபடுங்கள் அன்பும், அறநெறியும், மனித இருதயமும் வாழப் பாடு படுவோம் என்றும் உலகெலாம் வாழும் வகை செய்வோம் என்றும் அறைகூவி அழைத்த உண்மை ஆத்மஞானிகளின் வரிசையில், புரட்சித்துறவி அடிகளாரும் புதுமைக் கருத்துக்களைக் கொண்ட ஆன்மீகநய உலகத்தைக் காணத்துடித்தார். 'கடவுளைப் போற்று, மனிதனை நினை', என்ற மேற்கோளோடு மனிதன் வாழ சேவையாற்றிய மாபெருஞ் ஞானி இறை உலகில் வாழ்கின்றார்.

இவ்வருட் பெரியாரை நினைவுகூருமுகமாக இம்முறை சிவநெறி இப் பெரியாரின் திருவுருவப் படத்தை முகப்பாகக் கொண்டு வெளிவருகின்றது. அடிகளாரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மக்கட்பணியாற்றி வருகின்ற திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, மனித குலத்தை உய்விக்கத் தன்னை அர்ப்பணித்த இப் பெரியாரை எண்ணுவதோடு மட்டும் நில்லாமல் '' மனித குல மேம்பாட்டுக்காய் உழைப்போம் வாரீர் '' எனத் தொண்டர்களை வேண்டிநிற்கின்றது. அடிகளார் புகழ் பாடுவோம், அவர்வழி நிற்போம்.

'' ஆசிரியர் ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலையில் அடிகளார்

— இ. சோமசுந்தரம் திருக்கோணமலை —

திருக்கோணமலை சிவத்தலத்தைக் கொண்டு பெருமை பெற்ற பூமி திருஞானசம்பந்தப் பெருமானால் அருள் சுரக்க பாடல் பெற்ற "திருப்பதிகம்" ஒன்றே சைவ பெரு உலகத்தின் உயர்பீடம் திருக்கோணமலை என சான்று பகர்கின்றது. கடலும், மலையும், கங்கையும் சூழ இயற்கைத் துறைமுக நகரம் நம் நகரம், இந் நகரின் வரலாற்றுக் காலம் தொடக்கம் பெருமைக்குரிய அருள் ஞானியர் பலர் தமது திருவடிகளை இப் பூமியில் பதித்து பெருமை கொண்டனர்.

தமிழையும், சைவத்தையும் வளர்க்க வேண்டும் அதற்கென கல்விக் கூடங்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தோடு, சுவாமி விபுலானந்த அடிகள் இங்கு பதித்த சுவடுகள் வீண் போகவில்லை. திருக்கோணமலையின் அன்றைய இந்துக்கல்லூரி மாணவர்களின் வெளிப்பாடுகள் சைவ தமிழ் மெய் உலகிற்கு உரம் ஊட்டுவனவாகவும், நிறைந்த தொண்டுள்ளம் உள்ளவர்களை அறிமுகப்படுத்தவும் உதவின. இம் மாணவர்களின் பாசறைகளாக திருவள்ளுவர் கழகம், இளைஞர் அருள் நெறி மன்றம் ஆகியன சிறந்து விளங்கின. சுவாமி விபுலானந்தர் அவர்களுக்கும் அருட்திரு குன்றக்குடி அடிகளாருக்கும் ஆன்மீக தொடர்புகள் உண்டு. இறை சக்தியின் திருவருளினால் தவத்திரு குன்றக்குடிகளார் அவர்கள் திருக்கோணமலைக்கு வருகை தந்து இளைஞர் அருள் நெறி மன்றம் நடாத்திய சைவத்திருமுறை விழாவில் கலந்து கொண்டார். அதில் கலந்து கொள்ளும் பாக்கியம் எமக்குக் கிடைத்தது. சுவாமி விபுலானந்த அடிகளை தவத்திரு குன்றக்குடிகளார், முன்பு சந்தித்த வேளை அடிகளார் தாம் மடாதிபதியாவேன் என்றோ திருக்கோணமலைக்கு தவத்திரு அடிகளார் பெருமானாக வருவார் எனவோ கற்பனை செய்திருக்க முடியாது. அடிகளார் ஆன்மீக உணர்வுகள் உள்ளொளி பெருக்கி பேரருளின் பெருமையினால் திருக்கோணமலைக்கு வருகை தந்தார். என்று துணிந்து கூறமுடியும். அடிகளார் பெருமான் மடாதிபதிகள் கடல் கடந்து செல்லல் தவறு என்ற பாரிய சுவரை உடைத்து பல்லக்கும் பரிவாரமும் வேண்டாம். பாரெல்லாம் பரந்து வாழும் சைவத்தமிழ் உலகிற்கும் பாமர மக்களுக்கும் சைவத் திருமுறைகளைச் சொல்வேன். ஆலய மொழியாக தமிழை மீண்டும் மிளிரச் செய்வேன். என்று புறட்சித்துறவியாக நின்ற பெருமை அன்றும் இன்றும் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கே உரியது.

சைவத்திருமுறைகளையும் சமயக்குரவர்களையும் சைவ மக்களுக்கு எடுத்துக்கூறி சைவத்தின் உண்மைகளை மிளிரச் செய்த பெருமை தவத்திரு குன்றக்குடி அடிகளாரையும் சாரும்.

திருவண்ணாமலை ஆதின மகா சந்நிதானமாக விளங்கிய பெருமான், மடாதிபதிகளின் கட்டுக் கோப்புக்களில் இருந்து தன்னை விடுவித்து சைவம் பரப்பும் தொண்டே தவம் செய்யும் பாணி என நிமிர்ந்து நின்று நாத்திகவாதிகளுடன் சம எதிர் வாதம் புரிந்து, நாத்திகவாதிகளின் அன்பை பெற்று அவர்களால் அடிகளார் என அன்பாக அழைக்கப் பட்டு முதன்மை ஸ்தானம் கொண்டு சைவப் பேருண்மைகளை பெருமையடையச் செய்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் ஏற்றமிகுந்த தொண்டினை திருக்கோணமலை மக்களும் பெற்றனர்.

திருக்கோணமலை இளைஞர் அருள்நெறி மன்ற இணைச் செயலாளர்களாக நானும் எனது நண்பர் திரு. சி. குருநாதனும் விளக்கிய இந்த பாடலைக் காலத்தை நினைத்து இன்றும் பூரிப்படைகின்றேம். அளித்த நிகழ்வின் பெருமையேயாகும். இவ்வரவேற்பு நிகழ்வில் திரு. குலதிலகரெட்ணம், அமரர் டாக்டர் சித்ரவேல் ஐயா, அடிகளார் தாசன் தொண்டர், சண்முகராசா, திரு. வே. வரதசுந்தரம் மாஸ்ரர், கழகப் புலவர் அமரர் சிவசேகரனார், அமரர் புலவர் சத்தியமூர்த்தி, திரு. இராமபாலன் ஆகியோர் பங்கேற்று நடைமுறைப் படுத்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

நகரமோ விழாக் கோலத்திற்கு தயாராகுகின்றது. அமரர் புலவர் சத்தியமூர்த்தி சைவ சமய பாரம்பரிய வரவேற்பு முறைகளை சக இளைஞர்களுக்கு எடுத்து விளக்கி தயார் செய்து பூரணப் படுத்திய நிலையில் பெருமூச்சு விட்டு மகிழ்ந்து நிற்கின்றார். வாழ்த்துப் பாடல்களை திரு. இராமபாலன் என்ற இராமச்சந்திரன் பாடி இசையமைத்து இசையில் மூழ்கி தன்னை மறந்து நிற்கின்றார். இத்தகைய காட்சிகள் இன்றைக்கு முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த போதும் எமது நெஞ்சை விட்டு நீங்கா நினைவாக நிலைபெற்றுள்ளது தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைப் போற்று ! மனிதனை நினை !

— குன்றக்குடி அடிகளார் —

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் இவ்விரண்டு குறிக்கோளும் இருக்க வேண்டும். இவ்விரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையன. கடவுளைப் போற்றும் நெறியின் பயனே மனிதனை மதித்து வளர்ப்பதுதான். மனிதனை "நடமாடுங் கோயில்" என்று திருமந்திரம் பாராட்டுகிறது. கடவுளைப் போற்றும் நெறி நிற்பவர்கள் மதத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள் பண்டைக்காலத்தில் மனிதனையும் மதித்தனர் ; வாழ்வித்தனர். ஆனால் மதங்கள் காலப்போக்கில் கெட்டுப் போயின. மதத் தலைவர்கள், புரோகிதர்கள் ஆகியோர் ஆதிக்க வாதிகளாக - சுரண்டும் வர்க்கத்தினராக மாறினர். இந்த நிலை வளர்ந்தது.

"மக்களை விட மதம் உயர்ந்தது ; கடவுளுக்காகவே மக்கள். மதத்தலைவர்கள் மிகமிக உயர்ந்தவர்கள். இவர்களை வணங்குவதும் இவர்களுக்குக் காணிக்கை செலுத்துவதும் புண்ணியம்" என்ற கருத்துக்கள் கால் கொண்டன. இந்த நிலையில் சுரண்டும் இதர வர்க்கங்களும் ஆதிக்க சக்திகளும் ஒருங்கிணைந்து கொண்டு, உழைப்பாளர்களைத் துன்புறுத்தின.

இந்தச் சுரண்டலும் ஆதிக்கமும் என்றென்றும் நிலைபெற வேண்டி, மனித குலத்திற்குள் எண்ணத்

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

(3ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கோணமலை மக்கள் திரண்டு இந்துக்கல்லூரி முன்றலில் பொது வரவேற்பு அளித்தனர். அன்று குன்றக்குடி அடிகளார் பெருமான் தமது வரவேற்பிற்கு நன்றி கூறி ஆற்றிய ஆழமான சைவப்பேருரை பல இளைஞர்களையும் சைவ பெரு உலகிற்கு உள்வாங்கிக் கொண்டது. மட்டக்களப்பு சொல்லின் செல்வர் என அமைக்கப்பட்ட திரு. செ. இராசதுரை அவர்கள் அடுத்த நாள் விழாவினில் பேச்சாளராகக் கலந்து கொண்டார். குன்றக்குடி அடிகளார் மக்களால் முன் வைக்கப்பட்ட பல தரப்பட்ட வினாக்களுக்கும் ஆழமாகவும் விடையளித்து தமது நாவன்மையின் மூலம் சைவ மேன்மக்களின் உன்னத நோக்கை வெளிப்படுத்தி எச்சமயத்திற்கோ அல்லது எந்த மதத்திற்கோ குறைவானது அல்ல சைவ சித்தாந்தம் என்பதை நிரூபித்தார். விழாவினைத் தொடர்ந்து திருக்கோணமலை திருஞான சம்பந்தர் வீதியில் அமைந்துள்ள கற்பகப்பிள்ளையார் ஆலயத்திற்குச் சென்று தமிழ் மொழியில் அர்ச்சனையை ஆரம்பித்து வைத்தார். ஆலய வழிப்பாட்டில் தமிழில் தோத்திரம் உண்டா ? செய்யலாமா ? என்ற கேள்விகளுடன் வாழ்ந்த சைவ மக்கள் தமிழுக்கும் உண்டு இத்தகுதி என்பதை உணர்ந்தனர். சமய குரவர்கள் சிவத்தின் திருவருளை பெற்று எந்த மொழியில் என்று கேட்பார் சுவாமி அவர்கள். அதற்கு ஆதாரமாக நாயன்மார்களின் தேவாரம் திருவாசகம் என்பவற்றைக் கொண்டு தமிழ் பக்தி மொழி என்பதை உணரச் செய்வார். இலக்கிய நயமும், இனிய சைவ நெறியும் ஆழமான தமிழ் அறிவும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் வழியில் பலரை கவர்ந்து இழுத்தது அதன் ஈர்ப்பு சக்திகள் எம்போன்ற பலரை சைவ சித்தாந்தம் தலைசிறந்த நெறி என உணர உதவின. தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருக்கோணமலை வருகைக்கும் திருக்கோணமலையில் ஏற்பட்ட தமிழ் எழுச்சிக்கும் நிறைய தொடர்பு உண்டு. தமிழ் மக்களின் நிலங்கள் பறிக்கப் பட்டும், எவ்வழியின் அந்தஸ்து குறைக்கப்பட்டும் தீண்டாத மக்களாக தமிழ் மக்கள் கருதப்பட்ட வேளையில் காணி நிலம் வேண்டும், நாமும் நமது பூமியை பாதுகாப்போம் என்று அமரர் பெருமகனார் இராஜவரோதயம் அவர்களின் தலைமையில் காடுகள் அழிக்கப்பட்டு கிராமங்களாக மாறிய அச்சந்தர்ப்பத்தில் வருகை தந்த அடிகளார் பெருமானை அழைத்துச் சென்று சூட்டிய பெயர் தான் "அன்புவழிபுரம்" பெயரும் சூட்டிய குடியிருப்போருக்குக் கோயிலும் வேண்டும் என சைவ கோயிலுக்கு அத்திவாரம் இட்டு தமது பணியை சுவாமி அவர்கள் ஆற்றினார்கள். திருக்கோணமலைக்கும் தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்குப் பூர்விகமான சைவ மெய்யுணர்வு உண்டு. திருக்கோணமலை என்னும் பூமியுடன் பூரணம் பெற்று விளங்கும் அடிகளாரை நாம் என்றும் நினைவு கொள்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையர் அருள்நெறி

-- திருமதி. இராசநாயகி கந்தையா —

சிவநெறிச் சுடர்களாகிய ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள், மகான்கள் உள்ளனர். அவர்களின் உள்ளத் தீபத்தை உலகுக்குச் சுடர்விட்டுப் பிரகாசிக்கச் செய்த பெண்மணிகள் போற்றுதற்குரியவர்கள்.

பாண்டி மன்னன் சமணசமயம் புகுந்தான். மன்னன் எவ்வழியோ குடிகளுமவ்வழியே. ஆனால் சிவநெறிச் செல்வி மங்கையற்கரசியார் பாண்டி மன்னனை மீண்டும் சிவநெறியாளனாக்கினார். ''மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை'' என்று ஞானக் குழந்தையால் பாடப்பெற்று திருமுறையில் சுடர் ஒளியாகவேயுள்ளார். திருநீற்றின் மகிமையை உலகுக்கு விசேடமாகச் சைவர்க்கு அருளிய பெருமை மங்கையற்கரசியாருக்கே உரியது என்று கூறலாம். ஞானசம்பந்தப் பெருமானை வரவழைத்து சமணர் முன்னிலையில் ''மந்திரமாவது நீறு'' என்ற ஆரம்பத்தையுடைய திருநீற்றுப் பதிகத்தை நமக்கு அளிப்பித்து சைவநெறி தழைக்க வைத்த ஞானச்சுடர் மங்கையற்கரசியார் அவர்களே.

கலிப்பகை நாயனார் போர்க்களத்தில் மாண்டார் என்ற செய்தி கேட்டு உடன் கட்டை ஏற முனைந்தார் திலகவதியார். தன்தம்பி மருணீக்கியார் வேண்டுகோளுக்கிணங்க உடன்கட்டை ஏறாது விடுத்தார் மருணீக்கியார் சமணசமயத் தலைவராகி தருமசேனர் என்ற நாமத்துடன் இருந்ததைப் பொறுக்காத திலகவதியார் சிவனிடம் சரணாகதியடைந்தார். சூலை நோயால் தம்பியாரை ஆட்கொண்டருளச் செய்து சிவநெறி புகவைத்தவர் திலகவதியார். நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளைச் சைவ உலகு பெற்று இன்புற வைத்த பெருமையாளர் திலகவதியார் என்பதை நாம் நமது சிந்தனையிற் கொள்ள வேண்டும்.

செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் பண்புடையவர் காரைக்காலம்மையாராவார். கடையிலிருந்து கணவன் அனுப்பிய இரண்டு மாங்கனிகளிலொன்றை வந்த விருந்தினர்க்களித்து உபசரித்தார். கணவன் வீட்டுக்கு வந்து பசியாறிய பின் இருந்த மற்ற மாங்கனியைப் பரிமாறினார். அதன் சுவையில் இன்புற்ற கணவனார் மற்ற மாங்கனியையும் பரிமாறும்படி வேண்டினார் செய்வதறியாத காரைக்காலம்மையார் வீட்டிற்குள் சென்று சிவனை வேண்டினார். மாங்கனியொன்று பெற்றார். சிவானந்த மேலீட்டினால் அதனைப் பரிமாறினார். அப்பழத்தைத் தெய்வீகத்தீஞ்சுவையில் திளைத்த கணவனார் உண்மையறிய பரீட்சித்து ஒரு பழம் வேண்டினார். அம்மையார் கரத்தில் அரனார் பழம் தந்தார். அம்மையாரைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டார். ''அம்மையே'' என்று சிவனால் அழைக்கப்பட்ட காரைக்கால் அம்மையார் பிரபந்தங்கள் பாடினார். பதினோராந் திருமுறையில் அம்மையாரின் பிரபந்தங்கள் இன்றும் சைவ உலகில் சுடர் மிளிர்கின்றது.

தன் கணவருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. என்று கூறக்கேட்ட சாரதை தட்சனேஸ்வரம் போனார். ''நான் வணங்கும் ஜெகன் மாதாவாகவே உன்னை நினைக்கிறேன் என்று கூறினார். பகவான் ஸ்ரீ இராமக்கிருஷ்ண பரமஹம்ஸர் உங்''கள் விருப்பத்திற்கமைய சேவை செய்யவே உங்களை நாடி வந்தேன்'' என்று கூறிய சாரதா தேவியார் அருள் அன்னையாகினார் சுவாமி விவேகானந்தருக்கு அமெரிக்கா செல்ல ஆசிகூறி விடையும் அளித்தார். உலகெங்கணும் இராமக்கிருஷ்ண சங்கமும் பணியும் பரவலாயிற்று அன்னையின் அருள் வாழ்க்கையும் அன்பு முரசும் ஆன்மீகச் செல்மாயுள்ளன.

ஆண்டாள் கண்ணனைக் காதலனாகக் கரம் பிடித்தாள். அவளுக்கு உலகம் யாவும் கண்ணன் மயமாகவே இருந்தது. கண்ணன் காதலில் ஊறிப் பாடிய பாமாலை நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் இடம் பெற்றுள்ளன. ஏன் மீராபாயின் தெய்வீகப் பக்தி இன்றும் ஒளிப்பிளம்பாக உலகுக்கு உள்ளொளி பரப்பி நிற்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும்.

தன் கணவன் கள்வனல்லன் என்று நிரூபித்த கண்ணகி தெய்வமானாள். தூய இளந்துறவி இளங்கோவடிகளால் ஆக்கியருளப்பட்ட ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சிலப்பதிகாரத்தில் கற்பின் தெய்வமாக ஊற்றெடுக்கின்றாள். கோயிலும் வழிபாடும் அவருக்கே உரியதாகிவிட்டன!

அஷ்யபாத்திரம் பெற்று அருள் பசியும் வயிற்றுப் பசியும் தீர்த்த மணிமேகலாதேவி தெய்வமா

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5ம் பக்கத் தொடர்ச்சி)

னார். ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணி மேகலை என்னும் நூல் இன்றும் சுடர்விட்டு பிர காசிக்கின்றது.

துரியோதனன் சபையில் திரௌபதி துகிலுரியப் பட்டாள் ''கோவிந்தா, கோபாலா'' என்ற அவ ளின் சரணாகதிக்குரலால் அவள் துகில் வளர்ந்து கொண்டே போவதற்கு ஏதுவாயிருந்தது. திரௌ பதியின் சரணாகதி தன்மானத்தையும் காத்து தரு மரின் பொறுமையையும் பாருங்கு வழங்கியது.

அறநெறியாளர்களின் ஆன்மீகச் சிந்தனைகள் சிதையாதவை வாழ்வு ஒளிமயமானது. அவர்கள் உள்ளத்தால் பொய்யாத் சாதனையும் போதனை யுமுடையவர்கள். உள்ளத்தால் பொய்யாதொழுகி உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உறைபவர் மகாத்மா காந்தியடிகள். காந்தியடிகளின் சத்திய சோதனைக ளெல்லாம் அன்புடனும் பண்புடனும் மேற்கொண்ட கஸ்தூரிபாயினால் உலகம் போற்றும் உத்தமர் ஆனார்.

சத்தியவானின் உயிரைக்கவர்ந்த யமதர்மராஜா வுடன் வாதாடி வழக்கிட்ட சாவித்திரி சகலராலும் போற்றப்பதிவிராதா பெண்மணியென்பது புலனா கின்றது.

அரிச்சந்திரனின் சத்திய விரதத்திற்கு சந்திர மதியின் தியாகமும் ஆன்மீகப் பலமுந்தான் என்பதை மறுக்க முடியாது. தேவதாசனை இழந்த நேரத்தில் தன் அடிமைச் சித்திரவதையையும் சந்திரமதியின் மனபலமே அரிச்சந்திரனின் சத்திய விரதத்திற்கு களங்கமில்லாத ஆன்மீகத் துணையாக இருந்தது.

உலக நீதி நூலாம் தமிழ் மறை தந்த வள்ளு வனார் வகுத்த ஈரடிக் குறளுக்கு இணையிலாத் துணையாக அமைந்த வாசுகியின் பெருமை வானுல கும் புகழ்ந்தேத்தும் சீர்மையுடையது.

''கொக்கென்று நினைத்தாயோ கொங் கணவா''? என்ற மாதுவின் ஆன்மீகப்பலம் கர்வங் கொண்ட முனிவரின் அகங்காரத்தையடக்கிய உயர் நிலை நம்மவர் மனதில் எழாமல் இருக்க முடியுமா?

சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண் டுமா பாட்டி? என்று முருகப் பெருமான் தன் அருள் வாயினால் ஔவையாரைக் கேட்டுத் திரு வருள் பாலித்தார். ஔவைப் பாட்டி உலகுக்களித்த நீதி நூல்கள் முக்காலமும் சாதிசமய பாகுபாடில்லா தவை. வரப்புயர என்று மன்னனை வாழ்த்திய மங்கை மண்ணில் இலக்கியத்திலும், சமுதாயத் திலும், சீரிய நெறியிலும் சிறந்து விளங்கியவர். ஔவையாரின் வாழ்வும், பணியும், பண்பும், அறிவும் அன்னாரின் அருள் நெறி என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

அன்றும் இன்றும் என்றும் வாழ்ந்து கொண்டி ருக்கும் ஆன்மீகப்புருடர்களை அசையாத்துணையாக உள்ள ஞானச்சுடர்களை நாம் நினைவு கொள்ள வேண்டும். பள்ளிப் படிப்பில்லாதவர்கள், பட்டம் பெறாதவர்கள், பிரசங்கத்தில் ஈடுபடாதவர்கள், பகட்டறியாதவர்கள் ஆகிய இப்பெண்மணிகள் கடலில் ஆழ்ந்தெடுக்கும் விலை மதிப்பற்ற முத்துக் கள் போன்றவர்கள். அகங்காரமற்ற அடக்கமான ஆன்மீகச்சுடர் மணிகளை நமது சிந்தனையிற் கொள்ள வேண்டும்.

எத்தனை விதங்கள்தான் தற்கினும்
கேட்கினும் என்
இதயம் ஒடுங்கவில்லை.
யான் என்னும் அகந்தைதான் எள் அளவும்
மாற இலை
யாதினும் அபிமானம் என்,
சித்தமிசை குடிகொண்டது, ஈகையொடு
இரக்கம் என்
ஜென்மத்தும் நான் அறிகிலேன்;
சீலமொடு தவவிரதம் ஒரு கனவில் ஆயினும்
தரிசனம் கண்டும் அறியேன்.
பெய்தமொழி அல்லால் மருந்துக்கும்
மெய்மொழி
புகன்றிடேன், பிறர் கேட்கவே.
போதிப்பது அல்லாது சும்மா இருந்து அருள்
பொருந்திடாப் பேதை நானே,
அத்தனை குணக்கேடர் கண்டதாக்
கேட்டதா
அவனிமிசை உண்டாய் சொல்லாய்?
அண்ட பிதி ரண்டமும் அடங்க ஒரு
நிறைவு ஆகி
ஆனந்தம் ஆன பராபரமே.

(தாயுமானவர்)

சமுத்திரத்தின் மேற்பரப்பில்தான் அலைகள் உண்டு. ஆழ்கடலில் அலைகள் இல்லை அருள் ஞான வெள்ளத்தில் மூழ்கிய அருள் அன்னையர் அடக்கமே உருவானவர்கள். இத்தகைய அன்னையர் அருள் நெறி தம்மை மாத்திரமன்று தம்மைச்சார்ந்த அட வர்களையும் அருள் ஞானிகளாக மகாத்மாக்களாக பகவான்களாக சத்திய புருடர்களாக சிவநேயச் செல்வர்களாக உலகுக்களித்து இன்றும் அவர்கள் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்க அருள் புரிந் துள்ளனர்.

அன்னையர் அருள்நெறி நம் வாழ்வின்
பற்றுக் கோடாக இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்கள் வரை

— கே. சண்முகநாதன் சித்தவைத்தியர் —
(பாரதிபுரம் மூதூர்)

ஆதியே உள்ளத்து உற்ற
அறிவினுக்கு உச்சம் தோற்றாச்
சோதியே ! இன்ன பாங்கென்று
உறைவளர் தொகைக்குள் காணா

நிதியே, நிறையில் குன்னா
நிருமலர் எவரும் போற்றும்
ஓதியே பன்மை காட்டும்
ஒருமையே ; கருத்தன் ஆமே.

இவ்வுலகில் இரண்டு மாபெரும் இயக்கம் நடைபெற்று வருகின்றது. இவ்விரண்டும் ஒன்றை ஒன்று ஆகர்ஷித்து இயங்கிக் கொண்டு இருக்கிறது. இவ்விரண்டின் இழுப்பு (காந்த சக்தி) சக்தியால் புதிய உயிரினங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு உயிரினங்களும் ஒவ்வொரு கால கட்டங்கள் வரை வாழ்ந்து இவ்வுலகிலிருந்து மறைந்து விடுகின்றன.

இவ்விரு இயக்கத்தின் கூட்டுறவால் புதிய உயிர் உலகிற்கு அறிமுகமாகிறது. புதிய உயிரில் இவ்விரு இயக்கத்தின் ஆதிக்கம் உள்ளது. இவ்விரு இயக்கத்திற்கு பெரியோர்கள் கீழ்கண்டவாறு பல பெயர்களால் குறிப்பிட்டுள்ளனர். அவைகள் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | அ | உ |
| 2 | அகரம் | உதரம் |
| 3 | எட்டு | இரண்டு |
| 4 | சிவம் | சக்தி |
| 5 | அல்லாஹ் | ரசூல் |
| 6 | ஆதாம் | ஏவால் |
| 7 | சூரியன் | சந்திரன் |
| 8. | பகல் | இரவு |
| 9 | ஆதி | அந்தம் |
| 10 | சுக்கிலம் | சுரோணிதம் |
| 11 | சதாசிவம் | மனோன்மணி |
| 12 | ஆண் | பெண் |
| 13. | காரம் | சாரம் |

| | | |
|---|---|---|
| 1 | உ | அ |
| 2. | உகரம் | அகரம் |
| 3 | இரண்டு | எட்டு |
| 4 | நாதம் | விந்து |
| 5 | அடி | முடி |
| 6 | தாய் | தந்தை |
| 7. | மாதா | பிதா |
| 8 | குரு | தெய்வம் |

இவ்வாறு பல பெயர்களால் குறிப்பிட்டனர்.

ஒவ்வொரு உயிரினத்திலும் ஆண், பெண் என இரு இயக்கங்கள் உள்ளன. ஓரறிவு முதல் ஆறறிவு உள்ள சகல உயிரினங்களிலும் இவ்விரு இயக்கங்கள் இயங்கிக் கொண்டே உள்ளன.

அதேபோல் நமது உடலும் இவ்விரு இயக்கத்தின் (ஆண், பெண்) கூட்டுறவால் உண்டானதே நமது உடலிலும் இவ்விரு இயக்கங்களின் ஆதிக்கம் உள்ளது.

அதனால் நமக்கு இரண்டு கண்கள், இரண்டு காதுகள், இரண்டு மூக்கு துவாரங்கள், இரண்டு கைகள், இரண்டு கால்கள் ஆக இரண்டு இரண்டாக உள்ளன ஒன்று தாயின் இயக்கத்திற்கும், மற்றது தந்தையின் இயக்கத்திற்கும் சொந்தமாகிறது அதேபோல் ஒரு பஸ் எரிய இரண்டு வயர்கள் தேவைப்படுகின்றன. பஸ் பிரயாணம் செய்ய ஓட்டுனரும், நடத்துனரும் தேவை ரயில்கள் செல்ல டிரைவரும், கார்டும் தேவைப்படுகிறார்கள். இதேபோல் பல உதாரணங்கள் கூறலாம்.

தந்தையும், தாயும் குலாவி மகிழ்ந்து நாம் பிறந்துள்ளோம். நாம் உலகில் பிறப்பதற்கு மூல காரண கர்த்தாக்கள் நமது தாயும் தந்தையும் ஆவார்கள் அவர்களின் ஆதிக்கம் நமது உடலில் உள்ளது அதாவது நமது பெற்றோர்களாகிய தாயும், தகப்பனும் நமது உடலில் குடியிருக்கின்றனர் என்று கூறலாமல்லவா. அவர்கள் ஆதிக்கம் நமது உடலில் எவ்வாறு இயங்குகிறது என்பதை இனிவரும் விபரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

அர்த்தநாரீஸ்வர தத்துவத்தில் ( ) சிவன் பாதி, சக்திபாதி என்று திருச்செங்கோட்டில் அர்த்தநாரீஸ்வரர் கோவிலில் வைஷ தத்துவத்தை விளக்கியுள்ளார்கள். சிவன் வலப்புறமாகவும், சக்தி இடப்புறமாகவும், அன்னாரின் நடனங்களுக்கு தாண்டவம் எனவும் நமது முன்னோர்கள் கூறியுள்ளனர்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(7ம் பக்கத் தொடர்ச்சி)*

நமது உடலிலும் நாம் பிறந்த தேதியிலிருந்து சிவசக்தி தாண்டவம் நமது அந்நிய காலம் வரை நடைபெற்று வருகிறது. அதாவது சிறிது நேரம் சிவதாண்டவமும், சிறிதுநேரம் சக்தி தாண்டவமும் மாறி மாறி நடைபெற்று வருகிறது திருச்சிற்றம் பலம் என்று கூறும் நமது உடலில் சைவ சிவசக்தி தாண்டவம் பெற்று வருகிறது

நமது உடலில் நடைபெறும் சிவசக்தி தாண்டவம் (நடனம்) எவ்வாறு என்று புரிந்துகொள்வதற்கு '' அறிவு '' என்று பெரியோர்கள் கூறியுள்ளனர்.

இந்த தாண்டவத்தை நமது சுவாசத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். வலது பக்க மூக்குத் துவாரத்தின் மூலம் நடைபெறும் சுவாசத்திற்கு சிவ நடனம் (தாண்டவம்) என்றும், சூரியன் என்றும், தந்தை என்றும் ஆன்றோர்கள் விளக்கியுள்ளனர்.

இடது பக்க மூக்கு துவாரத்தின் வழியாக நடைபெறும் சுவாசத்திற்கு சக்தி நடனம் (தாண்டவம்) என்றும், சந்திரன் என்றும், தாய் என்றும் கூறியுள்ளனர்.

வலது பக்கமாக சுவாசம் நடைபெறும்போது இடது மூக்கு துவாரத்தின் வழியாக சுவாசம் நடைபெறாது அடைப்பட்டு இருக்கும் அவ்வாறே இடது பக்கமாக சுவாசம் நடைறெும்போது வலது பக்க மூக்குத் துவாரத்தின் வழியாக சுவாசம் நடைபெறாது அடைப்பட்டு இருக்கும்.

இவ்வாறே வலது பக்கமாகவோ, இடது பக்கமாகவோ மாறி மாறி சுவாசம் நடைபெறும். இதே போல் இப்பூவுலகில் உள்ள அனைத்து ஊர்வன, பறப்பன, நீந்துவன, நெளிந்து வருவன, நடப்பன போன்ற அனைத்து உயிரினங்களிலும் இவ்விரு இயக்கம் நடைபெற்று வருகின்றது.

சுவாச இயக்கம் மாறி மாறி நடைபெறுவதற்கு தாண்டவம் என்று பெரியோர்கள் கூறினர். மேலும் சிவசக்தி நடனம் என்றும், தாண்டவம் என்றும் கூறுவராயினர். வலது பக்கம் நடைபெறும் சுவாசத்திற்கு சூரிய தாண்டவம் அல்லது சிவ தாண்டவம் (ருத்ர தாண்டவம்) என்றும், இடது பக்கம் நடைபெறும் சுவாசத்திற்கு சந்திர தாண்டவம் அல்லது சக்தி தாண்டவம் என்றும் கூறப்படுகின்றது.

ஆக மேலே கூறப்பட்ட தத்துவம் (      ) நமது வாழ்க்கையில் மிகவும் அத்தியாவசியமானதும், நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்தி முன்னேற்றமடையவும் மிகவும் உகந்ததாக உள்ளது.

இத்தத்துவத்தின் மூலம் அடையும் பலனை இறை அருள் என்று கூறலாம். சிவதாண்டவம் (ருத்ர தாண்டவம்) (வலது பக்க சுவாசம்) உடலை சூடாக்கும். உடல் சூடானால் உடலிலுள்ள அணுக்கள் விரிவடைகின்றன. இரயிலின் இரண்டு தண்டவாளங்களுக்கு இடையில் சிறிது இடைவெளி விட்டு தண்டவாளங்களை இணைப்பார்கள். வெய்யில் காலத்தில் தண்டவாளங்கள் சூரிய வெப்பத்தால் சூடாகி விரிவடையும்போது இடைவெளியானது சந்தில்லாமலும், குளிர் காலங்களில் தண்டவாளங்கள் சுருங்கி இடைவெளியும் இருக்கும்.

இடைவெளியில்லாமல் தண்டவாளங்களை இணைத்தால் வெயில் காலத்தில் தண்டவாளம் கோணலாகி ரயில்கள் செல்ல முடியாமல் போய் விடும்.

வலதுபக்க சுவாசத்தால் உடல் சூடாகி உடலிலுள்ள அணுக்கள் விரிவடையும் போது ரத்தக் குழாய்களும் விரிவடைந்து அதிக ரத்த ஓட்டம் ஏற்படுகின்றது சீரண ரசங்களும் அதிகமாக சுரந்து உண்ட ஆகாரம் சீக்கிரம் சீரணமடைகிறது குடல்களும் விரிவடைந்து ஆகாரக் கழிவுகள் உடலிலிருந்து வெளியேற்றப்படுகின்றன.

சக்தி தாண்டவம் (இடது பக்க சுவாசம்) உடலை குளிர்விக்கிறது உடலிலுள்ள சகல உறுப்புகளும் சுருங்குகின்றன. அணுக்களும் சுருங்குகின்றன. சிவ தாண்டவத்தால் உடல் அடைந்த வெப்பத்தை குறைத்து உடலை தன்னிலைக்கு கொண்டு வருகிறது. இவ்வாறு சுவாசமானது வலது மூக்குத் துவாரத்தின் வழியாகவும் மாறி மாறி நடப்பதால் உடல் அதிக சூடாகாமலும், அதிக குளிரை அடையாமலும் நமது உடம்பு ஏர்கண்டிஷனர் போல் சம நிலையில் நிறுத்தி உடலைக் காப்பாற்றி வருகின்றது இந்த சுவாச நடைமுறை ஒழுங்காக நடைபெறாத போது உடல் நோய்வாய்ப்படுகிறது. அடுத்து இறை அருள் பெறும் மார்க்கத்தைப் பார்ப்போம்.

'' தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை '' '' தாயிற் சிறந்த ஒரு கோயிலுமில்லை '' என்ற ஆன்றோர் வாக்குப்படி நாம் உலகில் பிறந்து தோன்றுவதற்கு மூல காரணமானவர்கள் நமது பெற்றோர்களே. '' அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம் '' என ஆன்றோர்களின் கூற்றுக்கு ஏற்ப நாம் செய்யும் எல்லாத் தொழில்களுக்கும் அன்னார்களின் அருள் பெற்று ஆரம்பிப்பதே சிறந்ததாகும்.

நமது உடலின் வலது பாகம் தந்தையின் (சிவன்) அம்சமாகவும், இடது பாகம் தாயின் (சக்தி) அம்சமாகவும் உள்ளது என முன்பே பார்த்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அதாவது "தாய் தந்தை பாதம் பணிந்து செல்லே' என்று சித்தர் வாக்குப்படி தாய் தந்தையரின் பாதம் பணிந்து எந்தக் காரியமும் ஆரம்பிப்பது சாலச் சிறந்தது.

நமக்கு வலது பக்க சுவாசம் நடைபெறும்போது வலது பாதத்தை முதலிலும், இடது பக்க சுவாசம் நடக்கும்போது இடது காலை முதலிலும் எடுத்து வைத்து காரியம் ஆரம்பிக்க செய்வது தாய், தந்தையரின் அருள் பெற்றதாகும்.

இதையே "தாய் தந்தை பாதம் பணிந்து செல்வது" என்பது பொருள். நமது தினசரி அலுவல்களில் அருள் பெறும் வழிகளைப் பார்ப்போம்

1. காலையில் படுக்கையில் துயில் எழும்போது எந்தப் பக்க சுவாச நடைபெறுகிறதோ அந்தப் பக்க கையை முகத்தில் துடைத்துக்கொள்ள வேண்டும்

2. எந்தப் பக்க சுவாசம் நடைபெறுகிறதோ அந்தப் பக்க காலை முதலில் நிலத்தில் வைத்து படுக்கையிலிருந்து வெளிவர வேண்டும்.

3. வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது வெளியிலிருந்து வீட்டிற்குள் வரும்போது எந்தப் பக்க சுவாசம் நடைபெறுகிறதோ அந்தப்பக்க பாதத்தை முதலில் வைத்து செல்ல வேண்டும்

4. அலுவலகம், வர்த்தக ஸ்தாபனம், தொழில் கூட்டங்கள், வியாபார ஸ்தலங்களுக்குள் செல்லும் போதும் இதே முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் நாம் செய்யும் தொழில் முன்னேற்றம் ஏற்படும்

5. ரயில், பஸ், ஆகாய விமானம் போன்ற வாகனங்களில் பிரயாணம் செய்ய எந்த பக்க சுவாசம் நடைபெறுகிறதோ அந்தப் பக்க காலை முதலில் வாகனங்களுக்குள் வைத்து உள் செல்ல வேண்டும்

6. அதேபோல் எந்தப் பக்கம் சுவாசம் நடைபெறுகிறதோ, அந்தப் பக்கபாதத்தை முதலில் வெளி வைத்து வாகனங்களில் இருந்து இறங்க வேண்டும். இதனால் நம்முடைய பிரயாணம் நன்கு தடையின்றி சுகமாக நடைபெறும்

7. படுக்கைக்கு செல்லும்போது எந்தப் பக்க சுவாசம் நடைபெறுகிறதோ, அந்த பக்க பாதத்தை முதலில் படுக்கையில் வைத்து தூங்கச் செல்ல வேண்டும் நிம்மதியான தூக்கம் உண்டாகும்

8. இவ்வாறாக ஒவ்வொரு காரியத்தையும் அந்தந்த சுவாச பக்கமுள்ள பாதத்தை முதலில் வைத்து நமது செயல்களை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு நமது வாழ்க்கையில் அனுதினமும், தாய் தந்தையரின் அருள்பெற்று நடந்து வந்தால் நமக்கு துன்பங்கள் அணுகா. செய்யும் தொழில் சிறப்பாக அமையும் நமக்கு ஏற்படும் சிக்கல்களுக்கு இந்த அருளானது துணை நின்று உதவி புரியும். மனதுக்கு புரிபடாத காரியங்களை நமது மனதில் தோன்றி வெற்றிகரமான யோசனைகளை மனதிற்கு கொடுக்கும்.

"அறிவை அறிந்தவன் ஆயிரத்தில் ஒன்று
அருளை அறிந்தவன் லட்சத்தில் ஒன்று
குருவை அறிந்தவன் கோடியில் ஒன்று
கருவை அறிந்தவரை காண்ப தரிதே"

என்ற சித்தரின் வாக்குப்படி இக்கட்டுரையை வாசிப்பவர்கள் அனைவரும் அறிவையும், அருளையும் அறிந்து கொள்கிறீர்கள். அருளின் உதவியால் குருவையடைந்து கருவை அறியலாம்.

"பொருளில்லார்க்கு இவ்வுலகில்லை
அருளில்லார்க்கு அவ்வுலகில்லை"

இவ்வுலக வாழ்க்கையிலேயே நாம் அருள் பெற்றாக வேண்டும். இவ்வுலகிலேயே அருள் பெற்றால்தான் அவ்வுலகு நமக்கு அமைதியையும், இன்பத்தையும் தரும். ஆகையால் அருளில்லார்க்கு இவ்வுலகில் அருளும் இல்லை, பொருளும் இல்லை

ஆதலால் நமது நடைமுறை வாழ்க்கையில் மேலே கூறப்பட்டபடி அருள் பெற்று வந்தால் எல்லா வகையிலும் முன்னேற்றம் ஏற்பட்டு நமது வாழ்வு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக மலரும்.

நாம் அனைவரும் அன்னையையும், பிதாவையும் முன்னெறி தெய்வங்களாக மதித்து ஒவ்வொரு வினாடியும் அன்னார்களின் அருள் பெற்று சிறப்புறுவோமாக.

(தொடரும்..........)

---

நெருப்பில் இட்ட ஈர விறகும் விரைவில் உலர்ந்து எரியத் தொடங்குகிறது. அதுபோல் நல்லவர்களின் கூட்டுறவு உலகப் பற்றுள்ள மக்களின் மனத்திலுள்ள காமமும் ஆசையுமாகிய ஈரப் பசையை வற்றச் செய்கிறது. அதன்பின் அவர்களிடம் விவேகமாகிய நெருப்பு நன்றாக எரியும்.

— விவேகானந்தர் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்து அறிவியல் சுவட்டில்

— சித்தரடியான் —

சித்தர்களில் நமக்குத் நெறிந்த எழிய உதாரண மாய் திகழ்பவர் பாரதியார்.

'மூல்ன் மரபில் வந்த நானொருசித்தன்' என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வது மட்டுமல்லாது தன்னையும் சித்தர் பரம்பரையில் இணைத்துக் கொள்வதுடன் சித்தர்கள் பற்றியும் கூட பாடியுள் ளார்.

பட்டினத்தார், தாயுமானவர், வள்ளலார் போன்றோர் சித்தர் தத்துவங்களனைத்தையும் உலகத்தார் நலனிற்காக கோட்பாடுகளாக்கி அது பற்றி உபதேசமும் செய்தனர். அவர்கள் உபதேசங் கள் - யாவும் ஐம்புலன் நுகர்வுகளை, ஆசாபாசங் களை நலந்திங்குகளை, அவலங்களை அடிப்படை யாய் கொண்டு புரிந்த மொழியில், புரியாத கருத் துக்கள் கொண்டனவாய் அமைந்திருந்தன.

இவ்வாறான சித்தர் பாடல்களில் உள்ள குறி யீட்டுச் சொற்கள் பெரும் விசித்திரமுடையனவாக வும் தனியொரு அகராதி தேவைப்படுவனவாகவும் திகழ்கின்றன இன்றுவரையும் அனைத்து கருத்து நுட்பங்களும் புரிந்து கொள்ளப்படாதது உண்மை. இந்த உலகில் வாழ்ந்த, வாழ்கின்ற, வாழப்போ கின்ற, சித்தர் பெருமக்கள் எண்ணில் அடங்கப் போவதில்லையாயினும் சித்தர் பெருமக்களில் தலை யானோர் பதினென் என்பது கணக்கு.

தமிழ்ச்சித்தர்கள் பரம்பரையின் தலையாய் தலைவராய் கொள்ளப்படுபவர் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு காலப்பகுதியில் வசித்த திருமூலரே.

சைவ அடியார்களிற் பலரும் சித்தர்களாய் திகழ்கின்றனர். ஒன்பதாம் திருமுறையில் திரு விசைப்பா பாடிய கருவூர்த்தேவர், பதினோராம் திருமுறையில் ஞான நூல்களை இயற்றிய நக்கீர தேவர், கபில்தேவர் ஆகியோரும் சித்தர் பரம் பரையுள் சேர்கின்றனர்.

பட்டினத்தார் எனும் பெயருடன் இருவர் உள்ள தாய் வரலாறு காணுகிறது. இவர்களின் பின் கி. பி பதின்நான்கு முதல் பதினேழுவரையான பதினேழு வரையான நூற்றாண்டுகளில் சித்தர்கள் தோற்றம் அபரிமிதமாய் இருந்தது.

இவ்வாறாகவெல்லாம் தோன்றிய சித்தர் பெரு மக்கள் தம் இயற் பெயர்களை இழந்து அவர்கள் வாழ்ந்த இடப்பெயராலும் பாடிய பாடல் வகை, சொல்லாட்சியாலும் அழைக்கப்பட்டனர். அவ்வாறு அழைக்கப்பட்டோரில் பட்டினத்தார், கருவூரார் கொங்கணர், இடைக்காடர், அகப்பேய் சித்தர், பாம்பாட்டிச்சித்தர், குதம்பைச்சித்தர், அழுகணிச் சித்தர் போன்றோர் பிரபலமானவர்கள்.

நெடுங்காலமாகவே சித்தர்கள் பதினெண்மர் எனும் எண்ணிக்கை இருந்து வருகிறபோதும் தற் போது சித்தர்களின் எண்ணிக்கை ஐம்பதிற்கும் அதிகமாய் காணப்படுகிறது. முதன்முதலில் சித்தர் களை கணக்கிட்டு உரைத்தவர் காலத்தில் சித்தர் களின் எண்ணிக்கை பதினெட்டாய் இருந்திருக்கக் கூடிய சந்தர்ப்பத்திலோ அல்லது சித்தர்களில் தலை சிறந்தோர் பதினெண்மர் என்ற சந்தர்ப்பத்திலே மேற்சொன்ன பதினெட்டு எனும் கணக்கு சரியாக இருக்கலாம்.

அப்பதினெண் சித்தர்கள் பற்றி தெரிந்தவை விட அறியப்படாதவை அதிகம்.

1. சிவவாக்கியர்.

சித்தர்களுள் தலைசிறந்தவராயும், திருமூலரின் திருவிளக்கமாய் தோன்றியவராயும் பட்டினத்தா ரால் போற்றப்படுபவர்.

இவர் பற்றிய எந்த ஒரு குறிப்பும் கிடைக்க வில்லை. இவருடைய நூலின் பெயரான 'சிவவாக் கியம்' இவரை அழைக்கவும் பயன்பட்டது. உருவ வழிபாடு, தலயாத்திரை, மதவாதம், வேதம் ஓது தல், சாதி ஆசாரம் முதலியவற்றை இவரது பாடல் முழுதும் எதிர்த்தே குரல்தருகிறார்.

2. பட்டினத்தார்.

இவர் வரலாறு பெரிது. இவர் பட்டினத்துப் பிள்ளையார், பட்டினத்தடிகள், என்றெல்லாம் அழைக்கப்படுபவர் இவரது உதிப்பிடம் பூம்புகார் எனும் காவிரிப்பூம்பட்டினம்.

தந்தை சிவனேசர், தாய் - ஞானகலை

இவர் தனவணிகர் குலத்தில் உதித்தவர்.

இயற்பெயர் - சுவேதாரண்யன்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டினத்தாரின் சீடரின் பெயர் பத்ரகிரியார் கோயில் நான்மணிமாலை, திருக்கழுமலமும் மணிக் கோவை, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை, முதல்வன்முறையீடு, அருட்புலம்பல் போன்றவை அவரது நூல்களில் பிரபலமானவை. பிற்காலத்தில திருவெற்றியூரில் சமாதி அடைந்தார்.

3. பத்திரகிரியார்.

துளுவ நாட்டைச் சேர்ந்த மன்னர். பத்திரகிரி ராஜன் என்பது இயற்பெயர் பட்டினத்தாரை கழு வேற்ற முயன்றபோது அவரிடம் தோற்று அவருக்கு அடிமையானார். பின் பட்டினத்தார் உதவியுடன் முக்தி அடைந்தார்.

4. பாம்பாட்டிச்சித்தர்.

'ஆடு பாம்பே' எனப் பாம்பை ஆட்டுவித்துப் பாடுவதால் பாம்பாட்டிச்சித்தர் எனப் பெயர் பெற்றார். இவர் இயற்றிய பாடல்கள் 129 இன்று வழக்கில் உள்ளன. இப்பாடல்கள் பாம்பு வடிவாக மண்டலித்திலுள்ள குண்டலினி சக்தியை எழுப்பி அதன் மூலம் ஆன்மதரிசனம் பெறுவதை அடிப்படையாய் கொண்டே பாடப்பட்டவை.

பாம்பாட்டிச் சித்தர் பிறந்தது பாண்டி நாட்டில் திருக்கோகர்ணத்தில் ஆகும். இவர் சட்டைமுனியிடம் தீட்சை பெற்று கொங்கு நாட்டிலுள்ள மருத மலையில் வாழ்ந்து வந்தார்.

5. இடைக்காட்டுச் சித்தர்

கோனார் என வழங்கப்படும் இடையர்களையும் அவர்கள் மேய்க்கும் ஆடுகளையும் முன்நிறுத்திப்பாடியதால் இடைக்காட்டுச் சித்தர் என வழங்கப் பெற்றார். இடைக்காடு எனும் ஊரவராதலினாலும் இப் பெயர் பெற்றார் எனக் கூறுவதுமுண்டு இவர் கொங்கணச் சித்தரின் சீடராவார். இவர் காலம் பதினைந்தாம் நூற்றாண்டாகும்.

மலைச்சாரலில் ஆடுமாடு மேய்த்தபடி இருந்த போது நவசித்தருள் ஒருவர் அவரிடம் வந்து பால் கேட்டதாயும் அவர் பால் கொடுத்ததற்கு பிரதியாய் அவருக்க சகல சித்திகளையும் வழங்கினார் என வழங்கப்படுகிறது.

சில சமயம் சங்ககாலத்தில் வாழ்ந்த இடைக்காடர் எனும் புலவரையும் இவரையும் ஒருவர் என்று கூறுவதுண்டு ஆனால் அவர் இவரல்லர்.

6. அகப்பேய்சித்தர்.

அலையும்மனத்தினை பேயாக உருவகப்படுத்திப்பாடியதால் இச்சித்தர், அகப்பேய்சித்தர் எனப் பெயரிட்டு வழங்கப்பட்டார்.

மனத்தை பேயாய்கருதி, அதற்கு பெண் உரு கொடுத்து அதனை தன்முன் நிறுத்தி பாடல்களை புனைந்துள்ளார்.

'அகப்பேய்' என்பது மருவி அகப்பைச்சித்தர் என வழங்கப்படுவதுமுண்டு.

7. குதம்பைச்சித்தர்

குதம்பை என்பது காதணி. காதணி அணிந்த பெண்ணை முன்னிலைப்படுத்திய முறையில் பாடியதால் குதம்பைச்சித்தர் என வழங்கப்பட்டார்.

8. கடுவெளிச்சித்தர்.

கடுவெளி என்பது வாக்கு மனமும் கடந்த நிலையில் உள்ள பரவெளி. இதனைப் பாடியதாலே இவர் இப் பெயர் பெற்றார்.

இவர் 34 கண்ணிகள் கொண்டதொரு ஆனந்தக் கழிப்பினைப் பாடி அருளினார். இவரது காலம் பதினைந்தாம் நூற்றாண்டாகும்.

9. அழகணிச்சித்தர்.

இவர் பாடல்கள் அழகும் அணிநயமும் இனிமையும் கொண்டவை, எனவே அழகணிச் சித்தர் என அழைக்கப்பட்டு இது மருவி 'அழகணி' என்றும் 'அழுகுணி' என்றும் வழங்கப்பட்டது.

10. கொங்கண நாயனார்.

இளம் பெண்களை முன்னிறுத்தி 'கும்மியடியுங்கடி' என இவர் விழித்து பாடுவதால் இவர் பாடல்கள் 'வாலைக்கும்மி' என வழங்கப்படுகிறது. கொங்கு நாட்டைச் சேர்ந்த இவரது காலம் கி. பி. ஏழாம் நூற்றாண்டாகும். இவரை போகருடைய சீடர் என்றும் கூறுவதுண்டு.

11. சட்டைமுனி.

இவருடைய பாடல்களில் பெரும்பாலும் பூஜா விதிகளும் மேலும் வைத்தியமும் கூறப்படுகிறது. சட்டைமுனி ஆயிரத்தியிருநூறு, திரிகாண்டம், சரக்கு வைப்பு, நவரத்தின வைப்பு முதலிய நூல்கள் இவர் இயற்றியதாய் தெரிகிறது.

12. திருவள்ளுவர்.

திருக்குறளாசிரியரான திருவள்ளுவரும் இவரும் வேறானவர்கள் என்றே தெரிகிறது. 'திருவள்ளுவர் ஞானம்' காப்புச் செய்யுளுடன் இருபது பாடல்களை கொண்டது.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோமாதாவைக் கௌரவிப்போம்

— தொகுப்பு - க. கனகராசா —

இந்து குழந்தை என்றில்லை - எந்தக் குழந்தையானாலும் பெற்ற அன்னைக்கு அடுத்தபடியாக அதற்குப் பாலூட்டி வளர்ப்பது பசுதான். சில குழந்தைகளுக்கு அன்னையின் பாலை அருந்தி வளரும் பாக்கியம் இல்லாமல் போய் விடுவதுண்டு. அப்போது அந்தக் குழந்தைகளுக்கு அன்னையின் ஸ்தானத்தை வகிப்பது பசுதான்.

பசுவிடம் பாலை மட்டுமா பெறுகிறோம். கழிவுப்பொருட்களாக அது வெளியேற்றுவதெல்லாம் கூட நமக்குப் பயன்படுகின்றன. அவற்றுக்கு மருத்துவ குணங்கள் இருப்பதாக நமது மூதாதையர்கள் என்றோ கண்டுணர்ந்து சொன்னதை இன்றைய விஞ்ஞானமும் ஒப்புக்கொள்கிறது. பசுவின் சாணத்திலிருந்து எரிவாயு உற்பத்தி செய்து கிராமப் புறங்களிலெல்லாம் விளக்குகள் எரியவும் சமையல் செய்யவும், வயல் வெளிகளுக்கு நீர்ப்பாசனம் செய்யவும் ஆரம்ப கட்ட முயற்சிகளை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பசுவின் மேன்மையை முன்னதாகவே முற்றுமாக உணர்ந்தவர்கள் நாம். பாரதத்தின் பொருளாதாரமே பசுவை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. என்று உலகில் உள்ள பொருளாதார அறிஞர்கள் கூறுமளவிற்கு பசுவை நமது அன்றாட வாழ்க்கையுடன் பிணைத்துக் கொண்டவர்கள் நாம்..

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

---

(11ம் பக்கத் தொடர்ச்சி)

13. அகத்தியர்.

அகத்தியர் என்ற பெயரில் ஒவ்வொரு காலத்திலும் ஒருவர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்கள் முனிவர்களாயும், மருத்துவர்களாயும், சோதிடர்களாயும் இருந்துள்ளனர்.

புராணங்களில் கூறப்படும் அகத்தியரும் சங்க காலத்தில் வாழ்ந்தவரும் ஒருவரா என தெரியவில்லை. அத்துடன் இச்சித்தரின் காலமும் தெளிவாய் தெரியவில்லை.

14. திருமூலநாயனார்.

இவர் அறுபத்துமூவருள் ஒருவராயும் அட்டமாசித்திகளில் சிறத்தவராயும் திகழ்கின்றார். திருவாவடுதுறைக் கோயிலின் மேற்குப்புற அரசமரத்தடியில் அமர்ந்திருந்து மூவாயிரம் பாடல்கள் கொண்ட திருமந்திரத்தினை இயற்றினார். இடையன் மூலனின் உடலினுள் புகுந்ததால் திருமூலர் எனும் பெயர் பெற்றார்.

15. சுப்பிரமணியர்.

இவர் பற்றி பெரிதாய் குறிப்புகள் எதுவும் இல்லை.

16. வால்மீகர்.

வடமொழியில் இராமாயணம் இயற்றிய கவி வால்மீகியின் பெயரை உடைய இவரைப்பற்றியும் விபரங்கள் இல்லை.

17. இராமதேவர்.

சிவபூஜையால் சகல சித்திகளையும் பெற்றவர். நாகப்பட்டினத்தில் வீற்றிருந்தார் எனப்படுகிறது.

18. கருவூரார்.

கருவூரில் பிறந்த இவர் தஞ்சையில் இராஜராஜனின் கோவிலில் சிவலிங்கப் பிரதிட்டைக்கு அட்ட பந்தனம் செய்தவராவர்.

இவரது காலம் பதினொராம் நூற்றாண்டு.

இவ்வாறாக பதினெண் சித்தர்களை அறுதியிட்டாலும் சித்தர் இலக்கியம் என்பது என்றென்றும் அறுதி இடப்பட முடியாததொன்றென்பது தெளிவு.

(இன்னும் வளரும் ...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிகளார்

— நாகராஜா கணபதிபிள்ளை —

அடிகளார் என்ற அடைமொழிச் சொல்லுக்கு உரித்தானவர் தமிழுலகில் ஒருவர்தான் அவர்தான் அடிகளார் குன்றக்குடி அடிகளார். அடிகளார் என்றால் பணிவுக்கு உவமைச் சொல் தவம் செய்வார் தம் கருமம் செய்வார். அடிகளார் தவமே வடிவாகியவராக வாழ்ந்ததின் இரகசியமே அவரது பணிவு தான். அரசனாக இருந்தாலும் ஆண்டியாக இருந்தாலும், பெரியவராக இருந்தாலும், சிறியவனாக இருந்தாலும் எல்லோருக்கும் இனிக்கும் துறவி குன்றக்குடி அடிகளார். துறவி எதையும் அவர் துறக்கவில்லை. துறக்க வேண்டியவைகளை மட்டும்தான் துறந்தார். பட்டுப் பீதாம்பரம் அவரது உடையல்ல பல்லக்கு அவருக்கு கிடையாது. மாட்டு வண்டியிலும் போவார். எளிமையான காவி தோய்த்த பருத்திப் புடவைதான் அவரது உடை. அருளன்பர்களின் கண்கள் அவரது கண்களைத்தான் நோக்கும். பளிச்சிடும் பட்டாடைகள் இல்லாததால் யாரின் கண்களையும் கூசச் செய்யாது. அடிகளார் மட்டும்தான் தெரிவார். ஜிலு ஜிலுக்கும் குண்டலங்களும் மரகத மாலைகளும் அவரை அழகு செய்யவில்லை. துறவிக்கு இலக்கணம் அவர்தான். வாழ்ந்தார், மறைந்தார், மறைந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அகில உலகிற்கும் குன்றக்குடி ஒரு மாதிரிக் கிராமம். உலகினில் அது ஒரு கிராமம். இந்தியாவில் அது ஒரு வழிகாட்டும் மாநிலம். இந்தியாவில் பல தடவைகள் பிரதமராக இருந்த இந்திராகாந்தி அம்மையார் இந்தியர்களுக்கு கூறிய புத்திமதி, குன்றக்குடி அடிகளாரால் வழிநடத்தப்படும் குன்றக்குடியைப் பாருங்கள். அதனைப் பின்பற்றுங்கள். இந்தியா சிறப்படையும் இந்தியாவில் பேச்சளவில்தான் மதுவிலக்கு. குன்றக்குடியிலோ செயல்பாட்டில் மது

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

---

(12ம் பக்கத் தொடர்ச்சி)

**கோமாதாவைக்......**

பசுவின் முப்பத்து முக்கோடி தேவர்களும் வாசம் செய்வதாக உணர்ந்து அதன் புனிதத்தை வணங்கி வழிபடுவது நமது கலாச்சாரம். ஆனால் இடைக்காலத் தடுமாற்றங்களில் பசுவை எல்லா மிருகங்களையும் போல ஒன்றாக எண்ணும் சுபாவம் நமக்கு எப்படியோ வந்து சேர்ந்திருக்கிறது.

நமது குழந்தைகளுக்கெல்லாம் பாலூட்டிய மாதாவாயிற்றே. என்ற பதைப்பு இல்லாமல் பால் மரத்துப்போன பசுக்களை அடிமாடுகளாக கழித்துக்கட்டவும் நம்மில் பலபேர் துணிந்து விடுகிறோம். இந்த நன்றி கெட்டப் போக்கிற்கு எப்படி முற்றுப்புள்ளி வைப்பது ? காஞ்சிப் பெரியவர்களான ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் ஓர் அருமையான யோசனையை அருளியுள்ளார்கள். '' பசுவை பாரதத்தின் தேசிய மிருகமாகக் கொள்ள வேண்டும் என்பதுதான் அந்த யோசனை. தேசிய மிருகம் என்கிற அந்தஸ்தை பசுவுக்கு வழங்கி விட்டோமானால் அதற்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் எல்லாம் தானே முற்றுப்பெற்றுவிடும். '' என்று சுவாமிகள் கூறியிருக்கிறார்கள். சத்தியமான வார்த்தை. புராதன பாரதத்தில் பசுவிற்கு அளிக்கப்பட்ட மரியாதைகள் எல்லாம் '' தேசிய மிருகம் '' என்ற முறையில் மீண்டும் அதற்குக் கிடைக்கத் தொடங்கிவிடும். பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும் உரிய மிருகமாக பசுவைக்காப்பது தேசியக் கொள்கையாகிவிடும். பால் வற்றிய பசுக்களை அடிமாடுகளாக கொலைக்களத்துக்கு அனுப்பும் கொடும் செயலுக்குத் தானாகவே ஒரு முற்றுப்புள்ளி விழுந்துவிடும். ஜகத்குரு அறிவுரையைத் தட்டாமல் கேட்போம். பசுவை தேசிய விலங்கினமாக அறிவித்து கோமாதாவுக்குரிய கௌரவத்தை அளிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(13ம் பக்கத் தொடர்ச்சி)

விலக்கு. நெஞ்சில் உறுதியில்லை, நேர்மைத் தழையு மில்லை. வஞ்சனை செய்வாரடி கிளியே வாய்ச் சொல்லில் வீரரடி. தமிழனுக்கு பாரதி தந்த பரிசு இது. தமிழகத்தில் தோன்றிய பல அரசியல்வாதி களின் பிதற்றல் மதுவிலக்கு மேடைப் பிரசங்கங்க ளோடு மது விலகும். பின்பு மெதுவாக அரும்பும். பின்பு தழைக்கும். இது தமிழ் நாட்டுக்கு மட்டுமல் லாது முழு இந்தியாவுக்குமே ஒரு சாபக்கேடு. ஆனால் தமிழ் நாட்டில் அடிகளாரால் வழிநடத்தப்பட்ட குன்றக்குடி மட்டும் இதிலிருந்து தப்பி வாழ்ந்த தென்றால் அது அந்த குன்றக்குடி ஆதீனத்தின் 45 வது, தலைமைப்பீடத்தில் தம்கருமஞ் செய்த தெய்வசிகாமணி அருணாசல தேசிகராசவும், தமிழ் புலமை எய்தியவரும், எல்லோராலும் உயர்வாக மதிக்கப்பட்டவரும், தனக்கென உரிய தோரணையில் பேசும் நாவன்மை உடையவரும், உள்ளதை மற்றவர் கள் இலகுவாகப் புரிந்து கொண்டு வாழ்க்கையை வழியமைக்கக்கூடிய வகையில் அமையும் சொற்களை யதார்த்தமாக வெளியிடக் கூடிய எழுத்துத்திறமை யும் கொண்ட தவத்திரு குன்றக்குடி அடிகளாரையே சாரும்.

அரசியல்வாதிகளுக்கு அடிகளார் ஓர் புதிர். பல கட்சிகளைக் கொண்ட தமிழ் நாட்டு அரசியலில், ஆக்கபூர்வமான செயல்களைப் புரிந்த அண்ணாத் துறையின் அரசியல் அடிகளாரைக் கவர்ந்தது, ஒத் துழைப்பும் நல்கினார். ஈ. வி. இராமசாமிப் பெரி யாரினதும், அண்ணாவினதும், காமராஜனிதும், ராஜாஜியினதும் நல்ல பரந்த கொள்கைகளைப் பாராட்டி முன்னின்று ஊக்கமும் கொடுத்து செயல் படுத்துவதிலும் ஈடுபட்டு வெற்றிகொண்ட சமயத் துறவி அடிகளார். தொன்று தொட்டு இந்திய அரசியலில் சமயத்துறவிகளது பண்பான பங்களிப்பு தெய்வீகமாகச் செயல்பட்டே வந்தது. அடிகளாரது பங்களிப்பும் அத்தகையதே. இந்த தவஞானி ஏப்ரல் 15ம் திகதி 1995ல் மதுரையில் மாரடைப்பால் மரண மானார். அவரது சேவை நமக்குப் புதிரான உலகங் களுக்கும் தேவைப்போலிருக்கின்றது. சிவநெறி அடிக ளாருக்கு சிறப்பு மலர் வெளியிடுகின்றது. கட்டுரை எழுதச் சொன்னார்கள். குறுகிய கால எல்லைக்குள் ஒரு கடலைப் பற்றி கட்டுரை எழுதச் சொன்னால் ஆழம் காண முடியாத அடிப்பரப்பில் அமைதியும், மேற்பரப்பில் கொந்தளிக்கும் அலைகளைக் கொண்ட கடலை எப்படிக் காண்பது, எப்படி அளவிடுவது. ஞாபகத்திற்கு வருவதெல்லாம் அந்த உத்தம துறவி யின் திருக்கோணமலை விஜயம்தான்.

திருக்கோணமலை தவபூமி. கோணமலையான் அமர்ந்த பூமி தவசிரேஷ்டர்கள் அடிக்கடி வந்து தரித்துச் செல்லும் பூமி. தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருக்கோணமலைக்கு வந்தது மட்டுமல் லாது, இங்கு அமர்ந்து விட்டார். இந்தப் பாக்கியம் இலங்கையில் வேறு எந்தப் பகுதிக்கும் கிடையாது. தனது ஆதீனத்தின் கிளை ஆதீனத்தை அமைத்து, அருள் நெறியைத் தொடக்கிவைத்தார். திருக்கோண மலை அருள் நெறி மன்றம் அதன் பெயர். குன்றக் குடி முருகன் சூழலில் குன்றக்குடி பீடம். திருக் கோணமலை முத்துக்குமரன் கோயில் வீதியில் அருள் நெறிப்பீடம். மன்றத்தை நிர்வகிக்க, துடிதுடிப்பாக ஓடித்திரிந்து விளையாடிய இளைஞன் சண்முக ராஜாவை தொண்டர் சண்முகராஜாவாக்கி, திருக் கோணமலைக் கிளை ஆதீனகர்த்தாவாகவும் ஆக்கி விட்டார் அடிகளார். நாம் செய்த பாக்கியம், அடி களாரின் மறைவை மறந்து இன்றும் அவரது அருள் நெறிகளையும் செயல்பாடுகளையும் தொண்டர் மூலம் பார்க்கின்றோம்.

திருக்கோணமலை திருவள்ளுவர் கழக இளைஞர் கள் அடிகளாரை முதன்முதலில் திருக்கோணமலைக்கு அழைத்தார். அருள் நெறி மன்றம் உருவாக்கப் பட்டு திருமுறை விழாக்கள் நடைபெற்றன. கழகத் தொடர்பால் அடியவனுக்கும் அடிகளாரோடு நெருங் கிப்பழக வாய்ப்புக் கிடைத்தது. 1957ல் திருமுறை விழாவிற்கு வருகை தந்த அடிகளாரை திருக்கோண மலை கிராமங்களுக்கெல்லாம் அழைத்துச் சென் றோம். கழக இளைஞர்களும், கழகப் புலவர் பெ. பொ. சிவசேகரனாரும் தொண்டரும் உடன் வருவார்கள். மூதூரில் திருக்கோணமலை எல்லை யிலே கோயில் கொண்டிருக்கும் மகாவலி கங்கையை தீர்த்தக் கங்கையாகக் கொண்ட வெருகலம்பதிக்குச் சென்றோம் ஸ்தல முருகனைத் தரிசிப்பதற்கு முன் பாக, கங்கையில் நீராடச் சென்றோம். தொண்டர் சண்முகராஜாவிற்கோ ஒரே பயம். அடிகளாரிடம் சுவாமி இந்தக் கங்கையில் முதலைகள் அதிகம் ஆபத்து வரலாம் நீராட வேண்டாமெனத் தடுத்துப் பார்த்தார். எனக்கோ அடிகளார் கங்கையில் நீராடும் போது புகைப்படங்கள் எடுக்கவேண்டுமென்ற ஆசை. அடிகளார் ஆனந்தமாக, எனக்கு ஒரு நல்ல நண்பன் கணபதிபிள்ளை கிடைத்திருக்கின்றான், நீர் என்ன சொல்லுகிறீர் எனக் கேட்டார் சுவாமி ஒரு பய மும் இல்லை இறங்குங்கள் சுவாமி என்றேன். துற விக்கு என்ன பயம் எனக்கூறி இறங்கி ஆனந்தமாக நீராடினார். அந்தக் காட்சியை பல கோணங்களில் படம் பிடித்தேன் இன்றும் மறக்க முடியாத நினை வலைகள். துறவிக்கு துறவியாகவும் நண்பர்களுக்கு நண்பனாகவும், மேதைகளுக்கு மேதையாகவும், அர சியல்வாதிகளுக்கு அரசியல் சாணக்கியராகவும் யார் யாருடன் எப்படிப் பழக வேண்டுமோ அப்படியே மிகவும் பணிவுடன் பழகும் பழுத்த ஞானப்பழம் அடிகளார். அவருக்கு ஏது பயம்? வெருகலம்பதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(14ம் பக்கத் தொடர்ச்சி)

எம்பெருமானைத் தொழுதுவிட்டுப் புறப்பட்ட அடிகளாரை மூதூர் பகுதி வாழ் கிராம மக்கள் வரவேற்ற காட்சி மறக்கமுடியாதவை. தெருவெல்லாம் மகரதோரணங்கள். பூரண கும்பங்கள். ஒவ்வொரு இடத்திலும் அடிகளார் அம்மக்களுக்கு அறிவுரைகள் வழங்கிக் கொண்டே வந்தார் பட்டித்திடல் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடந்த வரவேற்பை எப்படி மறப்பது. வள்ளுவன் வாய் மொழியைப் பற்றிப் பேசினார். வள்ளுவன் குறளோடு மட்டும் நிற்காதீர்கள். அறம் வளர, ஆதிக்கம் செழிக்க, வறுமை ஒழிய, தீமை அகல, சூதாடாதிருக்க, பொய் சொல்லாதிருக்க, புலால் உண்ணாதிருக்க, கள் குடியாதிருக்க, பிறரோடு அன்பாயிருக்க கற்றுத்தந்த தமிழ் மேதை வள்ளுவர். அவரின் வாய்மொழியை வாழ்க்கையோடு பிணையுங்கள். வாழ்ந்து பாருங்கள் நீங்களே நாங்கள்தானா வாழ்கின்றோம் என்று ஆச்சரியப்படுவீர்கள்'' என்றார். இந்த சொற்கள் என் உள்ளத்தில் பசு மரத்தாணிபோல் இன்றும் நிலைத்திருக்கின்றது.


இறுதியாக, மூதூரில் அவருக்கு ஒரு சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. காவி உடுத்த, நெற்றியில் பட்டை நீறணிந்து ஒரு துறவியை சைவசமயத்தவர்கள் மட்டுமல்ல, புறசமயத்தவர்கள் கூட ஆச்சரியமாகப் பார்த்தார்கள். கூட்டம் நடந்த இடத்தைச் சுற்றி வாழ்ந்தவர்களில் கூடிய பகுதியினர் இஸ்லாமியர்கள். வரவேற்புக்கு பதிலளித்துப் பேசத் தொடங்கினார் அடிகளார். சைவ சமயத்தைப் பற்றியா பேசினார்! அதற்குள் பொதிந்திருந்த சமரசத்தைப் பற்றியல்லவா பேசினார். வள்ளலாரின் கருத்தினை ஒருமையுடன் உனது திருமலரடி நினைக்கின்ற உத்தமர்களோடு உறவு கொள்ளுங்கள். மத மான பேய் பிடியாதிருக்க வேண்டும், ஒவ்வொருவரும் தம் தம் மதத்தை ஒழுங்காகப் பின்பற்றினால் பூசலேயிருக்காது என்றார் உனை மறவாதிருக்க வேண்டுமென்றார். ஆண்டவன் ஒருவனே என்பதை எல்லோரும் உணரச் செய்தார். அவர் பேசிக் கொண்டிருந்தபோது ஓர் பெரிய ஆச்சரியம் நிகழ்ந்தது. அங்குமிங்குமாக மூலைகளிலும் வீடுகளிலுமிருந்து மறைந்திருந்து, ஒலிபெருக்கி மூலம் அவரது பேச்சினைக் கேட்டுக்கொண்டிருந்த இஸ்லாமிய சகோதரர்களும், கிறிஸ்த்தவர்களும் மேடையை நோக்கி அவரின் அருகாமையிலேயே வந்து அவரின் சமரசப் பேச்சைக் கேட்டார்கள். கூட்டம் முடிந்ததும் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். எல்லோருக்கும் அன்பாயிருங்கள் என நல்லாசிகள் கூறினார். இஸ்லாமியச் சகோதரர்கள் அவரைப் பிரிய முடியாமல் பிரிந்தார்கள்.

திருக்கோணமலையில் அவரின் அன்பின் முதிர்ச்சி இன்று நம் கண்கூடாக அன்புவழிபுரமாகக் காட்சி தருகின்றது. பெயரிடப்படாத குடியேற்ற கிராமத்திற்கு அடிகளார் அழைத்துச் செல்லப்பட்டார். அவரைப் பார்த்ததும் மக்கள் உள்ளத்தில் அன்பு பரிணமித்தது. தங்களது கிராமத்திற்கு ஒரு நல்ல பெயரிடச் சொல்லி அடிகளாரைக் கேட்டார்கள். அன்போடு என்னை அழைத்தீர்கள். அன்போடு கட்டளையிடுகிறீர்கள். என்றென்றும் நீங்கள் அன்போடு வாழ வேண்டுமென இறைவனை வேண்டி உங்கள் கிராமத்திற்கு ''அன்புவழிபுரம்'' எனப் பெயர் சூட்டுகின்றேன் என்றார். மக்கள் நெஞ்சங்கள் நெகிழ்ந்தது. எந்த மதத்தவர்களோ சாதியினரோ மறுதலிக்க முடியாத பெயர். இன்றும் அன்பான இடமாகவே மிளிர்கின்றது.

இந்துக்கலாச்சாரம் அடிகளாருக்கு ஒரு மதச் சார்பற்ற நிலைப்பாடு சிவசின்னமான விபூதியை நெற்றியில் பட்டையாக அணியும் அடிகளார். மதத்தை அரசியலோடு கலப்பதை அடியோடு வெறுத்தவர். சட்டத்தின் கைப்பிடிக்குள் மதம் சிக்கிச்சீர் குலையக்கூடாது என்ற கொள்கையினைக் கொண்டவர். தாங்கள் தங்கள் மதத்தைப் பேணிப்பாருங்கள் பிற மதங்களை நிந்தித்து அதனூடாக இறைவனைப் பார்க்காதீர்கள். அல்லாவை வெறுத்து சிவனைப் பார்க்க முடியாது. இக்கொள்கையினை அடிகளார் கடைப்பிடித்ததினால்தான் அவரின் இழப்பினை இஸ்லாமியர்களும், கிறிஸ்த்தவர்களும் கூட பொறுக்க முடியாமல் இன்றும் நினைத்து மனமுருகிக்கொண்டிருக்கின்றார்கள். அவருக்காக மத சார்பற்ற இரங்கல் வழிபாடுகளும், பிரார்த்தனைகளும் உலகம் பூராகவே நடைபெற்றன. நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

விஞ்ஞானத்தை வளர்ப்பதில் கூட நிறைய ஆர்வம்காட்டி, அதன் ஊடாக பசும்பொன் முத்துராமலிங்க தேவர் மாவட்டத்திலும் குன்றக்குடியினை காரைக்குடியில் அமைந்திருக்கும் எலக்ரோ - கெமிகல் - ரிசேர்ச் இன்ஸ்ரிரியூட் (CECRI) அவர்களது உதவியுடன் இந்தியாவிலேயே ஒரு முன் மாதிரிக்கிராமமாக அமைத்து, குன்றக்குடி முருகன் அருளால் எல்லோருக்கும் அருள்மழை பொழிந்து கொண்டிருந்த அடிகளாரை நல்லுள்ளங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொண்டேயிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

'வாழ்க அடிகளார் வளர்க சிவநெறி'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(4ம் பக்கத் தொடர்ச்)

## கடவுளைப் போற்று ! மனிதனை......

தொலையாத சாதிப் பிளவுகளைத் தோற்றுவித்து அவர்களுக்குள் அழுக்காற்றினை வளர்த்தும் குழுச் சண்டைகளை உருவாக்கியும் இழிபடு வாழ்க்கைக்கு வித்திட்டனர். இதனால் மனித குலத்தில் முக்கால் பங்குக்கு தாழ்த்தப்பட்டவர்களாக்கப்பட்டனர். இவர்களுக்குத் திருக்கோயில் வழிப்பாட்டுரிமை இல்லை. ஏன் ? நாகரிகமாக உடுத்துதல்கூடக் கூடாது என்ற தடை. இந்த இழிநிலைமைகளைக் கண்டு மனம் வெம்பிய சில சமய ஞானிகள், இந்த சமூகக் கொடுமைகளை கலைந்து சமயத்தை சமுதாயத்திற்காக்க முனைந்தனர். திருமுறைக்காலத்தில் இந்த முயற்சிகள் தோன்றின. பின் வல்லளார், அதன் பின் காந்தியடிகள், அதற்கும் பிறகு தந்தை பெரியார், இவர்கள் எல்லாம் தோன்றி மனித உரிமைக்காகப் போராடினார்கள். ஆனால் மதத் தலைவர்கள் இதற்கெல்லாம் அசைந்து கொடுக்கவில்லை. இதனால் நாடு முழுவதும் இந்து மதத்தில் இருந்து வெளியேரிய கடவுள் நம்பிக்கை உடையவர்கள், புது மதங்கள், புது நெறிகள் கண்டனர். மதத்தின் நடைமுறைகள் - மதத்தின் தலைவர்களின் மனப்போக்கை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் மதத்தை விட்டு வெளியேறி, நாத்திகர்கள் ஆயினர். இவர்கள் தோன்றி போராடித்தான் ஆதி திராவிடர்களுக்கு ஆலய நுழைவுரிமை பெற்றுக் கொடுத்தார்கள். கடவுட் சிந்தனையாளர்களின் அங்கீகாரத்துடன் அல்ல - சட்ட மன்றங்களின் அங்கீகாரத்துடன் இந்தச் சூழ்நிலையிலும் ஆதி திராவிடர்களின் ஆலய நுழைவை இந்துமதத் தலைவர்கள் எதிர்த்தார்கள். அரிசனங்கள் - ஆதி திராவிடர்கள் நுழைந்த கோயிலுக்குள் கடவுள் இல்லை ஓடி விட்டார் என்று கூறி பல ஆண்டுகள் ஆதி திராவிடர்கள் நுழைந்த கோயிலுக்குச் செல்லாதவர்களை இந்நாடு மறக்கவில்லை மறக்கவும் முடியாது.

ஆதி திராவிடர்கள் நுழைந்தால் மதுரை மீனாட்சி, கோயிலிலிருந்து வந்துவிட்டாள் !என்று கூறி மதுரையில் ஒரு உயர்குடியினர் வீட்டிலேயே மீனாட்சி படத்தை வைத்து வழி பட்டார்கள் அது மட்டுமா ? ஆயிரக்கணக்காணவர்களுக்கும் கல்வியையும், ஞானத்தையும் தந்த கடவுளை நம்புவதாக நடிப்பவர்கள் செய்த கொடுமைகள் கொஞ்சமா ? கடவுளை நம்புவோராக நடிப்பு ! கடவுள் எல்லோருக்கும் வைத்த ஞானத்தை இந்த மனிதப் புரோகிதர்கள் மண்ணுலகக் கடவுளர்கள் - நாட்டுத் தேவர்கள் தட்டிப் பறித்த கொடுமையை எடுத்துக் கூற வார்த்தைகள் ஏது ? சுதந்திர அரசாங்கம் வந்தே கல்வி கிடைத்தது. வேலை வாய்ப்பு உண்டா ? வேலை வாய்ப்பெல்லாம் மேட்டுக் குடியினரின் ஏக போகமாக இருந்தது அண்ணல் காந்தியடிகளும் அம்பேத்காரும் தந்தை பெரியாரும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ கொள்கைப் போராட்டத்தின் வழியாக வந்த பலன்தானே, இன்று தாழ்த்தப்பட்ட மக்கள் பிற்படுத்தப்பட்ட மக்கள் அனுபவிக்கும் பட்டம் பதவிகள்.

'' கடவுள் உலகிற்கு பொதுவானவர், உலகிற்கு அம்மையார் அன்பே வடிவமாக இருப்பவர் '' என்றெல்லாம் பஜனை செய்யும் மதத் தலைவர்கள் - உப தேசிகள் ஏன் இந்த உரிமைகளை மதத்தின் பெயரால் மக்களுக்கு வழங்கவில்லை ? இந்த ஏமாற்றுகள் தாமே அல்லது நீதிப் பிறல்வுகள் தாமே, சமுதாயத்தின் ஒரு பகுதியில் கடவுள் இருந்தால் இந்தச் சதிகள் நடக்குமா ? என்ற கேள்விக்கு இடம் தந்தன, சமயத் தலைவர்கள் விடை தந்திருந்தால் திராவிடர் கழகம் நாத்திக இயக்கமாக வளர்ந்திருக்காது. இந்த நாட்டில் கிரிஸ்தவ மதம், இஸ்லாமிய மதம் இடம் பெற்றிருக்காது. இது இந்து நாடாகவே இருந்திருக்கும். யார் வெளியே போனாலும் கவலைப்படாது திருக்கோயில் மடப்பள்ளிகளை உரிமை கொண்டிருந்தவர்கள் மடங்களின் சொத்து சுக போகங்களை அனுபவித்தார்கள். '' வழக்கம்போல் '' தலைவிதி என்று கூறி வாளா இருந்தனர். இன்று மக்களாட்சி அரசு மகத்துவம் மேம்பட்டதாக இடம் பெற்றுவிட்டது. மாடாதிபதிகளை இல்லை நடமாடும் தெய்வங்களை மண்ணகத்தில் விளங்கும் கடவுனர்களை விளக்கம் கேட்கும் அளவுக்கு அரசு மேலாதிக்கம் செலுத்துகிறது. இந்தச் சூழ்நிலையில் தமத்தலைவர்கள் நடமாடுககிறவர்களானபின் மக்களை நாடுகின்றனர்.

கடவுளைப் போற்றியவர்கள் மனிதனை நினைக்க மறந்தால், மனிதனை நினைக்கத் தொடங்கியவர்கள் கடவுளைப் போற்ற மறுக்கின்றனர். இதில் எந்த அணி நல்லது, நம்மைப் பொறுத்த வரை இரண்டு அணியும் ஒன்றாதலே நல்லது இரண்டும் ஒன்றாகாது போலும் நமக்கு இரு அணிகளும் வேண்டியவைகளே, ஏன் இரண்டையும் ஆதரிக்காது போனால் வாழ்க்கையில் ஒரு பாதிதான் நடக்கும். இங்கே மனிதர்களை நினைக்காதவர்கள் உண்மையில் கடவுளைப் போற்றுபவர்கள் தாமா ? கடவுள் தத்துவம் மனிதனை மறக்கச் சொல்கிறதா ? மனிதனைத் தீண்டாமையிலும் வறுமையிலும் ஆழ்த்தி அழிக்கவா சொல்கிறது மதம் ? இல்லை, இல்லவே இல்லை. கடவுளைப் போற்றுபவர்கள் மனிதனை மதித்து உயர்த்தத் தவறினாலும் ஒரு வகையில் நாத்திகர்களே, ஏன் ? அவர்கள் கடவுள் சித்தத்தையே மதிக்காதவர்கள், கடவுளை நம்பாதவர்கள் கடவுளை மறந்துவிட்டு கடவுள் தம்மையைப் பெற்ற மனிதனை மதிக்கிறார்கள், போற்றுகிறார்கள். இந்த இரண்டிலும் நாத்திக்கத் தன்மை இருக்கிறது. இரண்டு அணிகளும் இணைதல் ஆத்திகம் ! அதுவே நமது கொள்கை.

நன்றி

' மக்கள் சிந்தனை குன்றக்குடிகள் '

## யுவ வருட பூரணை விரத தினங்கள்

| மாதம் | திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரத தினம் |
|---|---|---|---|---|
| சித்திரை | 2 | 15/04/1995 | சனி | சித்திரை பூரணை |
| சித்திரை | 31 | 14/05/1995 | ஞாயிறு | பூரணை |
| வைகாசி | 29 | 12/06/1995 | திங்கள் | பூரணை |
| ஆனி | 28 | 12/07/1995 | புதன் | பூரணை |
| ஆடி | 25 | 10/08/1995 | வியாழன் | பூரணை |
| ஆவணி | 23 | 08/09/1995 | வெள்ளி | பூரணை |
| புரட்டாதி | 21 | 08/10/1995 | ஞாயிறு | பூரணை |
| ஐப்பசி | 20 | 06/11/1995 | திங்கள் | பூரணை |
| கார்த்திகை | 20 | 06/12/1995 | புதன் | பூரணை சர்வாலயதீபம் |
| மார்கழி | 21 | 05/01/1996 | வெள்ளி | பூரணை |
| தை | 21 | 04/02/1996 | ஞாயிறு | பூரணை |
| மாசி | 22 | 05/03/1996 | செவ்வாய் | பூரணை |
| பங்குனி | 21 | 03/04/1996 | புதன் | பூரணை |

## யுவ வருட சதுர்த்தி விரத தினங்கள்

| மாதம் | திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரத தினம் | விசேட தினம் |
|---|---|---|---|---|---|
| சித்திரை | 20 | 03/05/1995 | புதன் | சதுர்த்தி | — |
| வைகாசி | 19 | 02/06/1995 | வெள்ளி | சதுர்த்தி | — |
| ஆனி | 17 | 01/07/1995 | சனி | சதுர்த்தி | — |
| ஆடி | 15 | 31/07/1995 | திங்கள் | சதுர்த்தி | — |
| ஆவணி | 13 | 29/08/1995 | சவ்வாய் | சதுர்த்தி | ஆவணி சதுர்த்தி |
| புரட்டாதி | 11 | 28/09/1995 | வியாழன் | சதுர்த்தி | — |
| ஐப்பசி | 10 | 27/10/1995 | வெள்ளி | சதுர்த்தி | — |
| கார்த்திகை | 9 | 25/11/1985 | சனி | சதுர்த்தி | — |
| மார்கழி | 10 | 25/12/1995 | திங்கள் | சதுர்த்தி | — |
| மார்கழி | 12 | 27/12/1995 | புதன் | — | திருவெம்பாவை ஆரம்பம் |
| மார்கழி | 21 | 05/01/1996 | வெள்ளி | சதுர்த்தி | திருவெம்பாவை முடிவு |
| தை | 9 | 23/01/1995 | செவ்வாய் | சதுர்த்தி | — |
| மாசி | 10 | 22/02/1896 | வியாழன் | சதுர்த்தி | — |
| பங்குனி | 10 | 23/03/1996 | சனி | சதுர்த்தி | — |

| இல | தமிழ் மாதம் | திகதி | ஆங்கிலத் திகதி | நட்சத்திரம் | கிழமை | சமய குரவர் | சந்தான குரவர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | சித்திரை | 12 | 25/04/1995 | சதயம் | செவ்வாய் | திருநாவுக்கரசுநாயனார் | — | — |
| 02. | சித்திரை | 28 | 11/05/1995 | அத்தம் | வியாழன் | — | உமாபதிசிவாசாரியார் | — |
| 03. | வைகாசி | 20 | 03/06/1995 | பூசம் | சனி | — | — | சேக்கிழார் |
| 04. | வைகாசி | 30 | 13/06/1995 | மூலம் | செவ்வாய் | திருஞானசம்பந்தர் | — | — |
| 05. | ஆனி | 18 | 02/07/1995 | மகம் | ஞாயிறு | மாணிக்கவாசகர் | — | — |
| 06 | ஆடி | 18 | 03/08/1995 | சுவாதி | வியாழன் | சுந்தரமூர்த்திநாயனார் | — | — |
| 07. | ஆவணி | 12 | 28/08/1995 | உத்தரம் | திங்கள் | — | மறைஞானசம்பந்தர் | — |
| 08. | புரட்டாதி | 6 | 23/09/1995 | பூசம் | சனி | — | அருணந்திசிவாசாரியார் | — |
| 09. | ஐப்பசி | 7 | 24/10/1995 | சித்திரை | செவ்வாய் | — | மெய்கண்ட தேவர் | — |
| 10. | கார்த்திகை | 27 | 13/12/1995 | மகம் | புதன் | — | — | ஆறுமுகநாவலர் |
| 11. | பங்குனி | 17 | 30/03/1996 | ஆயிலியம் | சனி | — | — | யோகர் சுவாமிகள் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குன்றார் பதிகம்

— தாமரைத்தீவான் —

## புரட்சிச்சாமி

1. எங்கெங்கும் சாமிகளை எல்லோரும் கண்டுள்ளோம்
எல்லா வீடும்
தங்கிவரச் சாப்பிட்டே சமயத்தின் பெயர் சொல்லித்
தாந்தாம் வாழும் !
இங்கிந்தப் புதுச்சாமி இருந்தாலும் குன்றத்தில்
இணையில்லாத
பொங்குதமிழுணர்வோடு புத்துலகப் பணிசெய்த
புரட்சிச்சாமி !

## துறவாத் துறவி

2. துறந்தாலும் பற்றெல்லாம் துறவாது தமிழ் பற்றித்
துறவியாகி
மறந்தாலும் மற்றெதையும் மறவாது தமிழினத்தை
மதிப்போராகி
'பிறந்தேனே எதற்காக - பேருக்கா ?' என்பதையும்
பெரிதாய் ஆய்ந்து
பறந்தோடித் தமிழ் கூறும் பலஇடமும் பணியேற்றோர்
பறந்தாராமோ ?

## நடுநிலை வாதி

3. இப்பக்கம் நிற்பார்கள் எல்லோரும், இல்லையெனில்
இதனை விட்டே
அப்பக்கம் நிற்பார்கள், அதுதானே பலர் போக்கு
அவ்வாறின்றி
எப்போதும் நடுநிலையாய் எம்பெரியார், அண்ணா நல்
இயல்பைக் கூடத்
தப்பாது வாழ்த்தியதோர் தவயோகி இவரன்றோ
தமிழகத்தார் ?

## சமுதாய முனிவர்

4. மக்களது பணியைத்தான் மகேசனது பணியாக
மதித்தார் அண்ணா !
தக்கதெனப் பாராட்டித் தானுமது பின்பற்றித்
தவமாய்ச் செய்து
சிக்கலெதுமில்லாமல் சீர்திருத்தக் கோட்பாடும்
சிறப்புற் றோங்கப்
பக்கபலமாய் மக்கட் பணிசெய்த தன்மையை யார்
பகர வல்லார் ?

## சிற்றூர் ஊழியர்

5. குன்றத்தின் குடியூரைக் குறையேதுமில்லாச்சீர்க்
குடியூராக்கி
நன்றென்று பிறர்சொல்ல நலமான திட்டங்கள்
நடக்கவைத்து
என்றென்றும் 'காந்தீயம்' இறவாது என்பதையும்
எடுத்துக்காட்டி
இன்றெல்லோர் இதயத்தும் இடம்பெற்றும் பணியாற்ற
எங்குற்றாரோ ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்கியப் புலவர்

6 இலக்கியத்துக்கள்ளூற்றி எல்லோர்க்கும் வெறியேற்றி
இதய மெல்லாம்
கலக்கியதோடல்லாமல், காய்தலுவப்பில்லாமல்
கனமன்றங்கள்
உலுக்கியதோடல்லாமல், உதிர்ந்தகனிக்கனியாவும்
உண்ணச்செய்த
தலைக்கனமே இல்லாதார் தமிழகத்தை எவ்வாறு
தாண்டிச்சென்றார் ?

## சொல்லுதல் வல்லார்

7. கேட்டாரைப்பிணித்திடவும், கேளாதார் விழைந்திடவும்
கிளத்துமாறே
தீட்டுகுறள் ஊடாகச் செப்பினார் தேவர், அதைச்
செவியிலேற்றி
ஆட்டினார் தம்நாவை, ஆடினாரா யாரும்
அசைந்தாரில்லை.
ஊட்டினார் தமிழமுதம் உண்டுவந்தோமினியார்
ஊட்டுவாரோ !

## குன்றக் குடியார்

8 குன்றத்தின் குடியான குமரப்பர் வழிதன்னில்
கொடும் பகைகள்
வென்றுமே தமிழ்தன்னை வேலாக்கி விளையாடி
வினைகள் போக்கி
நின்றுண்மைச் சைவத்து நெறிகாட்டி முறைகாட்டி
நீடிக்காமல்
இன்றெங்கு போய் என்ன பணியாற்றி மக்களொடும்
இருக்கின்றாரோ ?

## அடியார்க்கடியார்

9. அடியார்க்குமடியாராய் அழகான சுந்தரராய்
அன்பு காட்டி
கடியாமல் முனியாமல் கருணையெனும் கோலாலே
கட்டியாண்டு
முடிப்பாகை தலைசூடி முழுநாடும் தமிழோசை
முழக்கஞ்செய்து
'படிமீதென் பணிபோதும் – பங்குண்டு பிறர்க்கும்' எனப்
பரந்தாராமோ

## சாகாத் தமிழர்

10 சாகாத தமிழர் இவர், தவமாகப் பணியாற்றித்
தமிழ் உள்ளத்தாற்
போகாத தமிழர் இவர், பொய் வேடம் போடாத
புனிதக் காரர் !
நாகாக்கும் குறள் காத்து நல் அன்புவழி கண்ட
நமது சொந்தர் !
ஆகாததொன்றேது அவர்தொண்டு நாம் பற்றின் ?
அடியார் வாழ்க !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய வினா விடைப் புதிர் - 16

இந்துசமய தத்துவங்களையும் அதன் உண்மைகளையும் அறியும் பொருட்டு இதன்கீழ் தரப்பட்டுள்ள எல்லா வினாக்களுக்கும் இப்பத்திரத்தில் விடை எழுதி அனுப்பி வையுங்கள்.

1. இதிகாசங்கள் மூன்றும் எவை ?
2. சிவனின் ஐம்முகங்களும் எவை ?
3. ஐம்பூதங்களையும் கூறுக ?
4. அகச் சந்தான குரவர்களின் பெயர்களைத் தருக.
5. திருத் தொண்டர் தொகையில் எத்தனை நாயன் மார்களைப் பற்றிப் பாடியுள்ளார்
6. ஆலயங்களில் உற்சவங்கள் ஏன் செய்யப்படுகின்றன ?
7. கடவுளை வணங்கும் முறைகள் நான்கு கூறுக.
8 மாவிளக்கு எவ்வாறு செய்யப்படுகிறது.
9. எக்காலத்தை உத்தராயண காலம் எனக் கூறுவோம் ?
10. பூசையில் இடம் பெறும் ஐவகைச் சுத்திகளும் எவை ?

குறிப்பு :- இப்பத்திரத்தில் அல்லது இதனை இணைத்து விடை எழுதினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

பெயர் :-

முகவரி :-

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி :
ஆசிரியர்,
'' சிவநெறி ''
தி: மா. இ: இ: பேரவை
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

முதலாம் பரிசு - 50/-
இரண்டாம் பரிசு - 25/-
மூன்றாம் பரிசு - 10/-
ஆறுதல் பரிசு மூன்று தலா - 10/-

முடிவுத் திகதி :- 15 - 11 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச் சரம்

● மூதூரிலுள்ள அல்லை இடது கரை. 03 (L B 03)ல் உள்ள பாதிக்கப்பட்ட அகதிகளுக்காக பதின்ஆறு கிணறுகள் இறைக்கப்பட்டும் திருத்திப் புனரமைக்கப்பட்டதோடு, பத்துப புதிய மலசல கூடங்கள் அமைப்பதற்கும் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

மொத்தப் பெறுமதி ரூபா 1,35, 000/-

நிதி உதவி ; கனேடியத் தூதுவராலயம். (Canadian High Commission)

● பேரவையின் நான்கர்வது திருவாசக முற்றோதல் அண்மையில் பக்திசிரத்தையுடன் நடத்தப்பட்டது. அத்தோடு கடந்த சித்திரைத் திங்களில் நான்காவது திருவாசக விழாவும் சிறப்பாக நடத்தப்பட்டது. இத் திருவாசக விழாவில் தமிழகத்திலிருந்து வந்திருந்த சென்னை இராஜபுரம் புனித இராயப்பர் உயர்நிலைப் பள்ளி உதவி அதிபரும் சென்னை வெற்றிவேல் தமிழ்ப் பேராயம் என்னும் ஆன்மநேய அமைப்பின் தலைவருமான கவிராசயோகி கபிலவாணன் அவர்களும் (எம். ஏ எம். பில்) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவரும் தவத்திரு குன்றக்குடி அடிகளாரால் "கவிஞர் கோ" பட்டம் சூட்டப் பெற்றவருமான புலவர் சோம. சிவப்பிரகாசம் (எம். ஏ) அவர்களும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். திருவாசக விழாப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

● திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையினால் மூதூரில் பரிபாலிக்கப்பட்டுவரும் அன்னை சாரதா மகளிர் இல்லத்தின் ஓராண்டு நிறை விழா வைகாசித்திங்களில் மிகவும் சிக்கனமாகவும் பக்தி சிரத்தையாகவும் நடத்தப்பட்டது. பேரவையின் நிர்வாகிகளும், தொண்டர்களும், இல்லப் பரிபாலனக் குழுவினரும் கலந்து சிறப்பித்தார்கள். இல்ல நிர்வாகச் செயலாளரான திருமதி. சற்சிவானந்தம் சந்திரலீலா அவர்கள் யாவற்றையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்கள்.

● திரியாய் அகதிகளுக்கான உணவுப் பொருட்கள் விநியோகத்திற்காகப் பேரவை தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற் கொண்டு வருகின்றது.

● வழமை போல இக்காலப் பகுதியில் யோகர் சுவாமிகள் குருபூஜை, திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜை, திருஞானசம்பந்தர் குருபூஜை என்பன எம்மால் பக்தி சிரத்தையுடன் அன்பர்களின் உபயமாக நடத்தப்பட்டன.

● தவத்திரு குன்றக்குடி அடிகளார் சமாதி அடைந்ததை முன்னிட்டு பேரவை அலுவலகம், தி. த. கனகசுத்தரம்பிள்ளை நினைவு நூலகம் யாவும் மூடப்பட்டு அடிகளாருக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது. பேரவையின் அலுவலகத்தில் பேரவையின் கொடி அரைக்கம்பத்திலும், கறுப்புக் கொடி முழுக்கம்பத்திலும் பறக்கவிடப்பட்டிருந்தன.

● வழமை போல இவ்வாண்டும் பேரவையின் நலன் புரிப் பிரிவினரின் சுற்றுலா இடம் பெற்றது. இம்முறை நுவரெலியா சீதா அம்மன் ஆலயம், காயத்திரி பீடம் உட்பட ஹெக்கல பூந்தோட்டம், சிவனொலிபாதமலை ஆகியவற்றுடன் ஹற்றன், நாவலப்பிட்டி, மற்றும் மலை நாடுகளை மையமாக வைத்து இச் சுற்றுலா மேற்கொள்ளப் பட்டது. சிவானந்த தபோவனக் குழந்தைகள் அன்னை சாரதா இல்லக் குழந்தைகள் உட்பட நாற்பது குழந்தைகள் இச் சுற்றுலாவில் அழைத்துச் செல்லப்பட்டனர். இவர்களுக்கு யாவும் இலவசமாக வழங்கப்பட்டது.

மொத்தச் செலவு 35,000/-

● கொழும்பில் ஆனிமாதம் நடைபெற்ற நிதி நிறுவனங்களின் ஆய்வுக் கூட்டத்தில் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளரும், கிண்ணியா இந்து இளைஞர் மன்றப்பேராளர் திரு பா. சுசிதரனும் கலந்து கருத்துப் பரிமாற்றம் செய்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சிவநெறி சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் சிவநெறியில் வெளியாகும் இரு கூப்பன்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் சிவநெறியில் அவ்வப்போது வெளியாகும்.

ஆக்கங்களை மாணவர் தாமாகவே எழுதினார் என்பதை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும்.

உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பிவைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி·

ஆசிரியர்,
''சிவநெறி''
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.




## சஞ்சிகைக் குழு

- ★ திரு. கு. கோணாமலை ஆசிரியர்
- ★ திரு. க. சவுந்தரராசா துணைஆசிரியர்
- ★ திரு. வ. தங்கராசா
- ★ திரு. செ. சிவபாதசுந்தரம்
- ★ திரு. சு. கனகசபாபதி
- ★ திரு. நா. காளிராசா
- ★ திரு. கெ. தர்மகுலராசா
- ★ புலவர் வை. சோமாஸ்கந்தர்
- ★ திரு. பூ. புவனேஸ்வரன் வி. பொறுப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சேவையே மகேசன் சேவை

— திருமதி. ப. வன்னியகுலம் —

உலகிலேயே முதன் முதலாகத் தோன்றிய ஆன்மீக சாத்திரங்கள் வேதங்கள் தான் என்பது இந்துக்களின் முற்றுமுழுதான நம்பிக்கையாகும். " வித் " எனும் அடைமொழியிலிருந்து வேதம் என்ற சொல் தோன்றியதென்றும் " வித் " எனும் வடமொழிச் சொல் அறிதல் எனும் பொருளை உள்ளடக்கியதெனவும் அறிஞர் கூறுவர். இவ்வகையில் நாம் நோக்கும்போது வேதங்கள் அறிவு நூல்களெனக் கொள்ளலாம். வேதங்கள் வாய்மொழியாக அருளப்பட்டவை எனும் கருத்தும் உண்டு. இத்தகைய முதனூலாகிய வேதத்தில் ஒரு மனிதன் இவ்வுலகில் வாழும் காலத்தில் தெய்வம், ஞானிகள், பிதிரர், உடன் வாழும் ஏனைய மனிதர் ஆகியோருக்கு மட்டுமன்றித் தன்னைச் சூழ்ந்து வாழும் பிராணிகளுக்கும் சேவை செய்யக் கடமைப்பட்டவன் எனும் கருத்து ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டுள்ளதாக ஆன்றோர் செப்பியுள்ளனர், இந்நிலையில் நாம் சைவர்கள் எனக் கூறிப்புறச்சின்னங்களை அணிதலோடு மட்டும் நின்றுவிடாது சேவை மனப்பாங்கோடு செயலாற்றுதல் பயனுடையதாகும்.

உண்மையான சைவன் சேவை செய்தலையே தனது குறிக்கோளாகக் கொண்டவன் ஆவான் எனச் சமயச்சான்றோர் கூறியுள்ளனர். இச்சந்தர்ப்பத்தில் எவருக்குச் சேவை செய்தல் வேண்டும் என வேதத்தில் கூறப்பட்ட கருத்தினையே வள்ளுவர் பெருந்தகை,

" தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
தான் என்றாங்கு ஐம்புலத்தார் ஓம்பல் தலை

எனப்பகன்றார், இங்கு வேதத்தில் கூறப்படாத ஒக்கல் அதாவது உறவினர் ஒரு பிரிவினரை வள்ளுவர் கூறியமை உற்று நோக்கத்தக்கது, குறளில் உறவினர் எனப்படுவது உலக மக்கள் யாவரும் நம் உறவினரே " யாதும் ஊரே யாவரும் கேளீர் எனச் செப்பிய கணியன் பங்குன்றனாரின் கருத்திலேயே வைக்கப்பட்டுள்ளதெனலாம், உயர்நிலை உள்ளவர்களுக்கே சேவை செய்தல் அர்த்தமற்றது. அச்செயல் சேவை எனும் வரையறுக்குள் அடக்க முடியாது. எனவே ஒவ்வொரு மனிதனும் இறை வணக்கத்தோடு தத்தமக்கு இயன்றவகையில் உதவி தேவைப்படும் நிலையில் உள்ள மனிதர்களுக்கும், ஏனைய ஜீவராசிகளுக்கும் சேவையாற்றுதல் ஒப்பற்ற செயலாகும்.

இன்று எமது நாட்டைப் பொறுத்தளவில் போர்க்கால சூழ்நிலைகளால் சகல மக்களும் பலவித இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். உயிர் இழப்புக்களைவிட உயிரோடு வாழ்ந்து கொண்டே அடிப்படைத் தேவைகளைக்கூட அடைய முடியாத நிலையில் அகதிகளாக வாழும் மக்கள் எண்ணிக்கையில் அதிகமானோராக உள்ளனர். இத்தகைய மக்களுக்கு இந்து எனக்கூறிக்கொள்ளும் ஒவ்வொரு மனிதனும் சேவை செய்ய முன்வருதல் இறைவனை மகிழ்விக்கும் செயலாகும். இன்றைய உலகில் கூடுதலான மனிதர் தத்தம் வாழ்க்கை வசதிகளை மென்மேலும் பெருக்கிக்கொள்வதிலேயே நாட்டம் கொள்கின்றனர். தமக்கு மென்மேலும் சகல செல்வங்களும் பெருக வேண்டுமென ஆலயங்களுக்கு வேண்டுதல் செய்து நேர்த்திகளை நிறைவேற்றுகின்றனர். ஆலயங்களுக்கு செலவு செய்தல் அவமான செயலல்ல. ஆயின் அதே மனப்பாங்கு நாதியற்றவர்களும் உதவுவதிலும் இருக்குமேயானால் அதுவே நாம் இறைவனுக்கு செய்யும் மகத்தான தொண்டாகும்.

இறைவன் படைப்பில் சகல உயிரினங்களும் சமமானவை என்ற கோட்பாடு நிலவிவரினும், எம் மத்தியில் கண்பார்வையற்றவர்கள் கால் கை முடமானோர், பேசமுடியாதவர்கள் முதலியோர் பெருந்தொகையாகக் காணப்படுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 200க்கு மேற்பட்ட கண்பார்வையற்றோர் காணப்படுகின்றனர் என தரிசனம் நிறுவன செய்தியோடு தெரிவிக்கின்றது. இத்தகையோருக்கு கண்ணெனத்தகும் கல்வி வாய்ப்பினை வழங்குவது போற்றுதற்குரிய செயலாகும் இதுவரை காலமும் விழிபுலனற்ற தமிழ் பேசும் மாணவர்களுக்கு கைதடியிலுள்ள " நவீல்ட் " பாடசாலை மட்டுமே கல்வி கற்பது அரிதாக இருந்தது. அண்மைக்காலத்தில் 1990ல் , மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கல்லடி நொச்சிமுனையில் விழிப்புலனற்றோரோருக்கான தரிசனம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது, இப்பாடசாலையில் ஆரம்ப நிலையில் பிரெயில் எழுத்துக்கள் எழுதுவதற்கான பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதன் பின்பு அம்மாணவர்கள் சாதாரண பாடசாலைகளில் மாணவராக சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இத்தகைய நிறுவனங்களுக்கு சைவ மக்கள் இயலுமான உதவிகளை செய்ய முன்வரும்போது உண்மையில்,

" எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் "

எனும் ஆன்றோர் வாக்கு நிதர்சனமாக்கப்படும்.

(தொடர்ச்சி 24ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய வினா விடைப் புதிர் - 15
### சரியான விடைகள்

1. ஆன்மாக்களுக்குத் தனு கரண புவண போகங் களை முதற் காரணத்தினின்றும் தோற்றுவித் தல்.

2 சிவலிங்கப் பெருமானை அகத்தும், புறத்தும் பூசித்தல்.

3. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார்.

4. விபூதியை நிலத்திலே சிந்தாவண்ணம் வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் பார்த்துக் கொண்டு அண்ணாந்து '' சிவ சிவ'' என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றி னாலும் தரித்தல் வேண்டும்.

5. ஸ்ரீ பஞ்சாசஷரம்.

6. ஆன்மாவில் இருக்கும் பாசம் நீங்கி இறைவன் திருப்பாதங்களை அடைந்து பேரின்பம் அனுப வித்துக் கொண்டிருக்கும்.

7. ஆசமனமனம் பண்ணிச் சகளீகரணஞ் செய்து, கொப்பூழளவினதாகிய சலத்தில் இறங்கி நதியி லேயாயின் அதற்கு எதிர்முகமாக நின்றும் குள முதலியவைகளிலாயிற் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் நின்றும், இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும் இரண்டு கண்களையும் இரண்டு சுட்டுவிரல்களி னாலும், இரண்டு நாசிகளையும், இரண்டு நடு விரல்களினாலும் மூடிக்கொண்டு சிவபெருமானை சிந்தித்து ஸ்நானம் செய்தல் வேண்டும். (இப் படி மூடவது சண்முகி முத்திரை எனப் பெயர் பெறும்)

8. கேள்வி பிழையாகக் கேட்கப்பட்டது ஆதலால் இதனை நீக்குகின்றோம்.

9. வில்வம் எடுக்கலாகாத காலங்கள்.
திங்கட்கிழமை, சதுர்த்தி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணமி, மாசப் மாசப்பிறப்பு.

10 இருகரங்களையும் முட்டியாகப் பிடித்து, நெற்றி யில் மூன்று முறை குட்டி கைகளை மாறிச் செவிகளைப் பிடித்துக் கொண்டு மும்முறை தோப்புக்கரணம் போட்டு விநாயகரை வணங்க வேண்டும்.

## மாணவர் உலகு

### க. பொ. த (சாதாரணதர) பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு கணபதியின்வேறு பெயர்களும் அவற்றின் விளக்கங்களும்

- கணபதி - க - ஞானம் - அறிவுக்கும் வீடுபேற் றுக்கும் உரிய கடவுள்
  - ண - மோட்சம்
  - பதி - இருப்பிடம்
- கணபதி - பதினெட்டு கணங்களுக்குத் தலைவர்
- ஐங்கரன் - துதிக்கையை ஐந்தாவது கையாகக் கொள்வதனால் இப்பெயர் பெற்றார்.
- கணேசன் - க - மனோவாக்குகள் மனாவாக் குகளுக்கும் அவற்றை கடந்த நிலைக்கும் இறைவன்.
  - ண - அவற்றைக் கடந்த நிலை
  - ஈசன் - இறைவன்
- விநாயகர் - வி - இன்மை தமக்கு மேல் வேறொரு தலைவர் இல்லா தவர்.
  - நாயகர் - தலைவர்
- வக்கிரதுண்டர் - கொடிய மாயை துண்டிப்பவர்.
- இலம்போதரர் - அறிவுக்குப் புலனான பிரபஞ்சம் முழுவதையும் உண்டு தம்முள் அடக்குபவர்.
- விக்னேஸ்வரர் - விக்தினங்களை நீக்குபவர்.

(23ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கோணமலை மாவட்டத்தைப் பொறுத்தள வில் இந்து இளைஞர் பேரவை, பகவான் சத்திய சாயிசேவா சமித்தி குடும்பத்தினர், இந்து ஆலயங் களில் முதலான பல நிறுவன அமைப்புக்கள் மத அனுட்டானங்களோடு நின்றுவிடாது, சேவையில் தம்மை ஈடுபடுத்தி பொதுமக்களுக்கு பல தொண்டு களை ஆற்றி வருகின்றன. இம் முயற்சிகள் மென் மேலும் விரிவாக்கப்பட வேண்டும். சகல இந்து மக்களும் இத்தகைய சேவை நடவடிக்கைகளில் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும் அத்துடன் ஒவ்வொரு இந்துவும் எவ்வகையிலேனும் பிறருக்கு சேவை செய்வதை தனது வாழ்வில் இலட்சியமாகக் கொண்டு செயலாற்றும் போது இந்து தருமமும் ஒளிவிட்டு பிரகாசிக்கும் என்பதில் எவ்வித ஐயப்பா டும் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிவநெறி வளர வாழ்த்துகின்றோம்"

# ஹப்பி புக் சென்ரர்

மாணவ, மாணவியர்க்கு தேவையான புத்தகங்கள்,
அப்பியாசப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்,
அலுவலக காகிதங்கள், மற்றும் அழகுசாதனப் பொருட்களையும்
நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே
ஸ்தாபனம்

**ஹப்பி புக் சென்ரர்**
***2/8,*** **திருஞானசம்பந்தர் வீதி,**
**(சிவன் கோவிலுக்கு முன்பாக)**
**திக்கோணமலை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சிவநெறி வளர வாழ்த்துகின்றோம் "

## ஈஸ்ட் லிங்க் தொலைத் தொடர்பு நிலையம்

பெக்ஸ், டெலெக்ஸ், சர்வதேச நேரடித் தொலைத் தொடர்பு,
உள்ளூர் தொலைத் தொடர்புகள், போட்டோ பிரதிகள்,
போட்டோ பிரதி தாள்கள், அத்துடன்
பெக்ஸ்ரோல் (பேப்பர்) மொத்தமாகவும், சில்லரையாகவும்
இங்கே கிடைக்கும்

(உரிமையாளர் - கே. வி. தயாபரன்)

## 391 / ஏ, திருஞானசம்பந்தர் வீதி,
## திருக்கோணமலை.

தொலைபேசி இல :- 22704, 22851
பெக்ஸ் :- 94. 26. 22704.
டெலெக்ஸ் :-

இருபத்தி நான்கு மணித்தியால சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஸ்வப் பிரம்ம ஸ்ரீ காந்தன் குருக்கள் அவர்கள் நான்காவது திருவாசக விழாவில் அருளுரையாற்றுகின்றார்.



பேரவையின் நலன் பரிப்பிரிவின் வருடாந்த சுற்றுளாவில் மூதூர் அன்னை சாரதா மகளிர் இலல மாணவிகள் ஹக்கல பூந்தோட்டத்தைப் பார்வையிடுகின்றமை.



தி.மா.இ.இ. பேரவையின் நலன்புரிப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலாவின் போது மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன ஆலயததை தரிசித்தமை



திருவெண்காட்டில் கிடைத்த கல்யாண சுந்தரர் செப்புத்திருமேனி இராசராசன் காலம். கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும் சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான இளைஞர்களின் அமைப்பே
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை ஆகும்.

# இதன் வளர்ச்சிக்கு தாராளமாக உதவுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org